மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

4 | 1 - 11 - 55 | இதழ் 1



பழங் கிரேக்கத்தில் காட்சி தந்த

குத்துச்சண்டை வீரன்



சொற்பொழிவு ஆற்றும் ஆற்றல்

" கேட்பார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும், வேட்ப மொழிவதாஞ் சொல் " என்ற திருக்குறளின் இலக்கணத்திற்கு ஒரு தலைசிறந்த சிரிய இலக்கியம் அண்ணா அவர்கள்.

" அண்ணா " என்ற சொல் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களாலும், மாணவர்களாலும், பொதுமக்களாலும் அன்போடும் — அருமையோடும்—ஆர்வத்தோடும் குறிப்பிடப்படும்—அழைக்கப்படும் சொல்லாக இன்று இருந்துவருகிறது. அந்த அளவுக்கு அறிஞர் அண்ணாவின் சொற்பொழிவு எல்லோரையும் கவர்ந்திருக்கிறது.

தேன்துளியை விரும்பி வந்து எறும்புகளின் கூட்டம் எப்படி மொய்த்துக் கிடக்குமோ, அப்படி அறிஞர் அண்ணா அவர்களின் சொற்பொழிவைக் கேட்க நாலாப் பக்கங்களிலிருந்தும் மக்கள் கூட்டங்கூட்டமாகத் திரண்டுவந்து மொய்த்து கிடப்பதை எங்கும் காணலாம். தேனைச் சுவைக்கப் பலர்க்கும் எப்படி நா ஊறுமோ, அதுபோலவே அறிஞர் அண்ணா அவர்களின் சொற்பொழிவைக் கேட்கப் பலர்க்கும் செவியூறுவதைப் பார்க்கிறோம்.

பலகாலமாகப் பல மேடைகளில் பேசிக்கொண்டு வந்தாலும் பலர்க்குக் கவர்ச்சிகரமாகப் பேசும் ஆற்றல் வருவதில்லை. ஆனால் அறிஞர் அண்ணா அவர்கள் எடுத்த எடுப்பிலேயே சிறந்த சொற்பொழிவாளர் என்று பெயர் எடுத்துவிட்டார்கள். அவர் பச்சையப்பன் கல்லூரியில் 'கலைமுதியர்' (ஆனர்சு) வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும்போதுதான் முதன்முதல் பேச்சு மேடையில் ஏறினார்கள்; அதுவும் கல்லூரிகளுக்கிடையே நடைபெற்ற பேச்சுப் போட்டி மேடையில்தான் முதன்முதல் ஏறினார்கள். அந்த முதல் பேச்சில்—அதுவும் முதல் போட்டிப் பேச்சில் முதற் பரிசு பெற்றார்கள் என்றால், அவரது பேசும் ஆற்றல் எந்த அளவுக்கு அவரோடு இரண்டறத் தோய்ந்துகிடக்கும் இயற்கைப் பண்பாக மிளிருகிறது என்பதை உணரலாம்.

பேச எடுத்துக்கொண்ட பொருளை, எடுத்துக்கொண்ட பொருளிலேயே நின்று, நிரல்பட எடுத்து மொழிந்து, ஐயந்திரிபற விளக்கிடும் ஆற்றலும், எதுகை மோனை போன்ற அணி அழகோடு கூடிய அழகிய சொற்களை இனிய ஓசையில் எடுத்தியம்பும் பண்பும், கேட்போர் உள்ளத்தில் நகை, வீரம், இரக்கம், அழுகை போன்ற ஒன்பதுவகைச் சுவைகளையும் கிளர்ந்திடும் தன்மையும், இடையிடையே உவமைகளையும், கதைகளையும் கோர்த்திடும் அழகும், ஏற்றத்தாழ்வான குரலோடு மோதாமல்—முட்டாமல்—தயங்காமல்—தள்ளாடாமல் — தட்டுத் தடுமாறாமல் — விரைவுபடாமல் ஆற்றொழுக்கென சொற்களை ஒன்றன்பின் ஒன்றாக வெளியிடும் பான்மையும், காரண காரிய விளக்கங்காட்டி வாதிடும் சிறப்பும், எளிமை—அருமை—மேன்மை—கண்ணியம்—நாகரிகம் ஆகிய அரிய பண்புகளைக் கடைப்பிடிக்கும் பாங்கும் அறிஞர் அண்ணா அவர்களிடத்தில் ஒன்றுதிரண்டு காணப்படுவதுபோல் வேறு யாரிடத்திலும் காணமுடியாது. அறிஞர் அண்ணா அவர்களின் குரலோசை யாழ்—குழல்—நாயணம்—மகுடி ஆகியவற்றின் ஓசைகள் அனைத்தையும் ஒன்றாக இணைத்தாற்போன்ற இனிமையுடையதாகும். அவரின் குரலோசை நயமே பலரைத் தன்பால் ஈர்த்து நிறுத்திவிடும்.

சொற்பொழிவு ஆற்றும் ஆற்றலில் அறிஞர் அண்ணா அவர்களுக்கு ஒப்பானவர்களோ எடுப்பானவர்களோ தமிழகத்தில் எவரும் இல்லை; இந்தியத் துணைக் கண்டத்தில் இருப்பார்களா என்பதும் ஐயப்பாடே!

மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

1 - 11 - 55 செவ்வாய்க்கிழமை

ஆரம்பக் கல்வி

டாக்டர் அழகப்பா அவர்களைத் தலைவராகக் கொண்ட சென்னை அரசால் நியமிக்கப்பட்ட ஆரம்பக்கல்வி ஆய்வுக்குழு, ஆரம்பக் கல்வியின் பல்வேறு முனைகள் பற்றியும் ஆராய்ச்சி நடத்தி, இப்பொழுது தன்னுடைய கருத்துரைகளை வெளியிட்டுள்ளது. அவற்றில் சில கருத்துரைகள் ஏற்றுக்கொள்ளக்கூடியனவாகவும், வேறு சில கருத்துரைகள் மாற்றிக் கொள்ளவேண்டியனவாகவும் அமைந்திருக்கின்றன.

ஆய்வுக்குழு, பதினைந்து முக்கிய நோக்கங்களை, ஆரம்பக்கல்வியின் குறிக்கோள்களாக இருக்கவேண்டும் என்பதை வற்புறுத்திச் சுட்டிக்காட்டியுள்ளது. அப்பதினைந்து குறிக்கோள்கள் வருமாறு :

1. தாய்மொழி அல்லது வட்டார மொழியில் நல்ல தேர்ச்சியும், இலக்கியத்தில் போதுமான அளவு பயிற்சியும், கணக்கில் நியாயமான அளவு திறமையும்.

2. இயற்கையோடு தொடர்புள்ள எல்லாப் பகுதிகளின் உண்மைகளும், நியதிகளும் பற்றிய அறிவு. குறிப்பாக வாழ்வு நலம் (சுகாதாரம்) பற்றிய தத்துவங்கள்.

3. அவரவருடைய வரலாற்றுப் பண்பாட்டுப் பரம்பரை பற்றிய அறிவு. பொதுவாக மனித குலத்தின் செயற்கரிய செயல்கள், குறிக்கோள்கள்.

4. அறிவைச் செலுத்தும் முயற்சிகளில் பற்று.

5. உடல் வளர்ச்சி.

6. தூய்மையான வாழ்வுநலப் பழக்கங்கள். தன் வாழ்வுநலம் மட்டுமல்லாமல் பொதுவாழ்வுநலமும் கூட.

7. நல்ல நடத்தை, பிறரோடு அன்பாகப் பழகுதல்.

8. முறைப்படி செயலாற்றும் பழக்கம்.

9. தொல்லைகளைப் பொருட்படுத்தாமல், எடுத்த செயலை நிறைவேற்றும் விடா முயற்சி.

10. கட்டுப்பாடாகவும், ஒழுங்காகவும் நடந்துகொள்ளல்.

11. பிறர்க்கு உதவி செய்தல்; பிறர்க்காகத் தன்னலத்தை விட்டுக்கொடுத்தல்.

12. ஒத்துழைப்பு.

13. நாணயம்.

14. கைகளையும், கண்களையும் பயன்படும் முறையில் பயன்படுத்துதல்.

15. இன்றியமையாதபோது உடலுழைப்பில் ஈடுபட உள்ள உறுதி படைத்த போக்கு.

இந்தக் குறிக்கோள்களைப் பொதுவாக எவரும் வரவேற்கவே செய்வர். "இன்றைய உலகத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள, ஆரம்பக் கல்விப் பயிற்சி பொதுக்கல்வியாய் இருக்கவேண்டும். அதேபோது மேல்படிப்புக்கான ஆற்றல் உள்ளவர்களுக்குப் போதுமான வசதி செய்வதாய் இருக்கவேண்டும். குழந்தையின் எல்லாத் திறமைகளையும் வளர்ப்பதே கல்வியின் குறிக்கோளாக இருக்கவேண்டும்" என்று ஆய்வுக்குழு தன் அறிக்கையில் கூறியிருப்பது போற்றி வரவேற்கத் தக்கதொன்றேயாகும்.

மேற்கூறப்பட்ட எல்லாக் குறிக்கோள்களையும், ஒரு ஆரம்பப்பள்ளி மாணவன் நிறைவேற்ற வேண்டுமானால், இப்பொழுதுள்ள ஐந்தாண்டு கால அளவு போதாது, அது எட்டு ஆண்டு கால அளவாக உயர்த்தப்பட வேண்டும் என்பது பொருளுடையதாகவே படுகிறது. உயர் ஆரம்ப வகுப்பின் பாடத்திட்டம், கிட்டத்தட்ட நடுத்தரப் பள்ளிப்படிவங்களின் பாடத்திட்டத்தைப் போன்றதாக்கலாம் என்றும், எட்டாவது வகுப்புப் பொதுத் தேர்வும், 4-வது படிவத்தில் சேருவதற்கான சான்றுத்தாள் வழங்குவதும் நீடிக்கலாம் என்றும் ஆய்வுக்குழு கூறியிருப்பது வரவேற்க வேண்டியதாகும்.

அகில உலகப் பொதுமொழியாக விளங்கும் ஆங்கிலம், இந்நாட்டில், மக்கள், தாய்மொழியினரல்லாத பிற மொழியினரிடத்துப் பேசுவதற்கும் சரி, பிற உலகமக்களோடு பேசுவதற்கும் சரி பெரிதும் பயன்படும் மொழியாக இருந்துவருவதை உணர்ந்து, ஆய்வுக்குழு

"ஆருவது வகுப்பிலிருந்து எட்டாவது வகுப்புவரை ஆங்கிலத்தைக் கட்டாயப்பாடமாக்கலாம்" என்று கூறியிருப்பது பாராட்டுதற்குரியதாகும். நம்மால் தேவையற்றது என்று கருதப்படுகின்ற "இந்தி போன்ற வேறெந்தப் புதிய மொழியும் உயர் ஆரம்பப் பள்ளிகளில் பயிற்றுவிக்கப் படவேண்டாம்" என்று ஆய்வுக்குழு கூறியிருப்பது மகிழ்ச்சியோடு வரவேற்கத்தக்கதாகும்.

"பள்ளி நேரத்தின்போது மத போதனை கூடாது. ஆனல் ஒழுக்க போதனை செய்யப்படலாம்" என்று ஆய்வுக்குழு சொல்லியிருப்பது போற்றி வரவேற்கத்தக்கதாகும். மத போதனை என்பது பெரும்பாலும் காலத்திற்கு ஒத்துவராத கருத்துக்களையும், மூடநம்பிக்கைகளையும் குருட்டுப் பழக்க வழக்கங்களையும், மதவெறியையும் இளம் உள்ளங்களிடையே புகுத்தி, அவ்வுள்ளங்களைப் பாழ்படுத்துவதற்குக் காரணமாக இருப்பதால், அதனை அகற்ற ஆய்வுக்குழு செய்த முடிவு நல்ல முடிவேயாகும். அன்பு—அருள்—ஒழுக்கம் — நாணயம் — நேர்மை — பொய்பேசாமை — கொலை செய்யாமை — கட்குடியாமை—களவு செய்யாமை—சூதாடாமை—புறங் கூருமை போன்ற பண்புகளில் மாணவர்கள் பயிற்றுவிக்கப்படவேண்டும் என்பதை நாம் யாரும் மறுக்கவில்லை. அவற்றை மத நம்பிக்கையின் மூலமாகத்தான் புகுத்த முடியும் என்ற கருத்தை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. அவற்றை நேரிடையாகவே புகுத்தலாம்; அதனல் உருவான பலன் கிட்ட வழி ஏற்படும். மதத்தின்மீது பற்றுவைத்து, அதன் காரணமாக ஒழுக்கமாக நடந்துகொள்பவர்களைவிட ஒழுக்கத்தின்மீது பற்று வைத்து ஒழுக்கமாக நடந்துகொள்பவரின் எண்ணிக்கைதான் ஏராளம். எனவே ஒழுக்கத்தைக் கற்பிக்க மதம் தேவையில்லை என்ற முடிவுக்கு ஆய்வுக்குழு வந்திருப்பது மகிழ்ந்தேற்றுக்கொள்ளத்தக்கதாகும்.

ஆரம்பப் பள்ளியின் நடைமுறை நாட்கள் 220-இலிருந்து குறைக்கப்படவேண்டியதில்லை என்றும், ஒரு நாளைக்கு ஐந்துமணி நேரம் பள்ளி நடைபெறலாம் என்றும், எந்த ஆரம்பப் பள்ளியும் அது பொதுமக்களால் நடத்தப்பட்டாலும் சரி, தனி ஒருவரால் நடத்தப்பட்டாலும் சரி மாணவர்களிடம் கட்டணம் வசூலிக்கக்கூடாது என்றும், முதல் மூன்று வகுப்புகளுக்குக் கூடுமானவரை பெண்களையே ஆசிரியராக நியமிக்கவேண்டும் என்றும், ஆசிரியர்களின் சம்பள விகிதங்கள் அதே பொதுவான திறமைகள் பொருந்திய மற்ற தொழில்களில் உள்ளவர்களின் சம்பள விகிதங்களைக் காட்டிலும் சிறந்ததாக இருக்கவேண்டும் என்றும், பள்ளியிருக்கும் சிற்றூரிலேயே ஆசிரியர்களுக்குக் குடியிருப்பு வசதி செய்துதரப்படவேண்டும் என்றும், கட்டாய ஆரம்பக்கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் முதல் நடவடிக்கையாக 300-உம் அதற்கு மேலாகவும் மக்கள் கொண்ட ஒவ்வொரு சிற்றூரிலும் அதற்குள்ளேயோ அல்லது வெளியே நியாயமான தொலைவிற்குள்ளேயோ ஒரு பள்ளியை ஏற்படுத்தவேண்டும் என்றும், பாடப் புத்தகங்கள் வைக்கப்பட்ட மூன்று ஆண்டிற்குள் புத்தகங்களை மாற்ற (குறிப்பிட்ட காரணங்களுக்காக மட்டுமின்றி) அனுமதிக்கக்கூடாது என்றும் சொல்லப்பட்டிருக்கும் சில முக்கியமான முடிவுகள் ஏற்றுக்கொள்ளப்படவேண்டியவைகளாகும்.

ஆதாரக் கல்வி என்ற பெயரில் நடைபெறும் உருப்படாத திட்டத்திற்கு ஆய்வுக்குழு ஆதரவு அளித்திருக்கவேண்டியதில்லை. தோட்டத் தொழில், நூல் நூற்றல், கைராட்டை சுற்றல், பானை செய்தல், பாய் முடைதல், கூடை பின்னுதல் போன்ற குடிசைத்தொழில்களில் இளம் மாணவர்களின் நேரத்தையும், ஆற்றலையும் பாழாக்கவேண்டிய தேவையில்லை. பள்ளிக்கூடங்களைவிட்டு வெளியேறிய பிறகு இந்தத் தொழில்களைச் செய்துதான் வயிறு பிழைக்கவேண்டும் என்ற நிலை ஏற்பட்டால், அத்தகையோர் இத்தொழில்களை வயதுவந்த நிலையிலும் எளிதில் கற்றுக்கொள்ளலாம். இத்தகைய தொழில்களை மிகக் குறுகிய காலத்தில் கற்றுக்கொள்ளலாம். மூளையைப்போட்டுக் குழப்பிக்கொண்டிருக்க வேண்டிய இன்றியமையாமையோ, மிகக் கடினமான பயிற்சிபெறவேண்டிய இன்றியமையாமையோ இல்லை. மேலும் இத்தகைய குடிசைத்தொழில் உற்பத்தி, உள்நாட்டு வெளிநாட்டு வாணிகத்தைப் பெருக்காது; உலகச் சந்தைகளைப் பிடித்துத்தராது; வருமானத்தையும் பெருக்காது; போதுமான அளவு கூலியைத் தராது; உற்பத்திப் பெருக்கத்தை அளிக்காது; பிறநாடுகளோடு போட்டிபோட உதவி செய்யாது. ஆதாரக்கல்வி என்ற பெயரில் குடிசைத் தொழில்அறிவைப் பெருக்குவதைவிட, பொறித்தொழில்அறிவை வாய்ப்புள்ள இடங்களிலெல்லாம் பெருக்குவது நல்லது. பள்ளிக்கூடம் பயிற்சிக்கூடமாக இருக்கவேண்டுமே ஒழிய தொழிற்சாலையாக ஆக்கப்பட்டுவிடக்கூடாது.

"உற்பத்திகளின் மூலப்பொருள்களின் கிரயத்தில் ஒரு பகுதியைச் செலுத்திவிட்டு, அப்பொருள்களை மாணவர்களே பயன்படுத்த

கருத்துக் கதிர்

டாக்டர் வரதராஜுலுவின் கருத்து

“ தேசிய ஒற்றுமையைக் காக்க ஆங்கிலத்தையே மாநில அரசுகளுக்கும் மத்திய அரசுக்கும் இடையே உள்ள பொதுமொழியாகவும், மத்திய அரசின் அரசியல் மொழியாகவும் வைத்துக்கொள்ளலாம். ஆங்கிலம் சர்வ தேச மொழியாகையால் அது ஒற்றுமைப் படுத்தும் கருவியாக இருப்பதுடன், அயல் நாட்டு அறிவியல், மருத்துவம் முதலிய நூல்களைப் பயிலுவதற்கும் உதவும்.”

என்று டாக்டர் பி. வரதராசலு அவர்கள் சேலம் நாகரசம்பட்டியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார். தாய்மொழி அல்லது வட்டாரமொழி அறிவோடு, அகில உலகப் பொதுமொழியான ஆங்கில மொழியின் அறிவு இருந்தால், போதுமானது, வேறு மொழி பயிலுவதற்கான இன்றியமையாமை ஏற்படாது என்று நாம் அடிக்கடி வலியுறுத்திவரும் கருத்தைக் காங்கிரசுக்காரராகிய டாக்டர் வரதராசலு அவர்களும் வலியுறுத்தியிருப்பது மகிழ்ந்து வரவேற்றற்கு உரியதாகும்.

மேலும் அவர் பேசும்போது, “ தமிழ்நாடு—ஆந்திரம்—கேரளம்—கருநாடகம் ஆகிய அரசுகளுக்குச் சேர்த்து ஒரே பப்ளிக் சர்வீசுக் கமிசனும், உயர்நீதி மன்றமும் இருந்தால் போதும்” என்றும் கூறியுள்ளார்கள். திராவிடப் பகுதிகள் நான்கும் ஒன்றுசேர்ந்து கூட்டாட்சியின் கீழ் வாழும் இயல்பும்—தொடர்பும்—உறவும்—ஒற்றுமையும் உடையன என்று நாம் அடிக்கடிக் கூறிவரும் கருத்துக்கு, டாக்டரின் மேற்கண்ட கருத்து வலியூட்டுவதாக அமைந்திருக்கிறது. திராவிடம் தனிநாடு என்ற நிலைமையைப் போகப்போக டாக்டர் வரதராசலு அவர்களும், அவரைப் போன்ற பிறரும் உணர்வார்கள் என்று கருதுகிறோம்.

❖ ❖ ❖

திராவிடமொழி ஆராய்ச்சிக் கூடம்

திராவிட மொழி ஆராய்ச்சிக்கூடம், வெறும் புராண—இதிகாச—வடமொழி நூல்களைப் பற்றிய ஆராய்ச்சியில் தன் நேரத்தையும், நினைப்பையும், அறிவையும், ஆற்றலையும், பொருளையும், உழைப்பையும் பாழ்படுத்தாமல், திராவிட மொழிகளின் மொழியாராய்ச்சி—கலையாராய்ச்சி — சொல்லாராய்ச்சி — வரலாற்று ஆராய்ச்சி ஆகியவற்றில் பயன்படுத்திப் பொதுவாக தமிழ்—தெலுங்கு—கன்னடம்—மலையாளம் ஆகிய திராவிட மொழிகளை மேன்மேலும் வளர்ப்பதற்கும், குறிப்பாகத் தமிழ் மொழியை உருப்படியான வகையில் வளர்ச்சியுறச் செய்வதற்கும் பாடுபட முன்வரவேண்டும் என்று வற்புறுத்திக் கூறவிரும்புகிறோம்.

அந்த விழாவில் பேசிய தோழர் ஆர். பி. சேது அவர்கள், “ நாட்டில் 14 மொழிகள் பேசப்படுகின்றன. அவைகளில் வடநாட்டில்

அனுமதிக்கவேண்டும்” என்று ஆய்வுக்குழு கூறுகிறது. இளம் மாணவர்கள் என்ன பொருள்களை சீராக உற்பத்தியாக்கிவிட முடியும்? அப்பொருள்கள் தரத்தில் உயர்ந்திருக்கும் என்று எப்படித்தான் நாம் எதிர்பார்க்க முடியும்? பள்ளியில் பயிற்றுவிக்கப்படும் தொழிலறிவு, பிற்காலத்தில் வருமானம் பயக்கக்கூடியதாகவும், பொருள் உற்பத்தியைப் பெருக்கக் கூடியதாகவும், வாணிகத்தைப் பெருக்கக்கூடியதாகவும், தேவையை நிறைவேற்றக்கூடியதாகவும், வெளிநாடுகளுக்குப் பொருள்களை ஏற்றுமதி செய்யக்கூடியதாகவும் இருக்கவேண்டும். இப்பொழுதுள்ள ஆதாரக் கல்வித்திட்டத்தின் மூலம் அதனைச் செய்ய முடியாது என்பது திண்ணம். எனவே பொறித்தொழிலறிவு பெருகுவதற்கான வழிவகைகள் ஆரம்பக் கல்வித்திட்டத்தில் சேர்க்கப்படவேண்டும்.

ஆய்வுக்குழு ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் சம்பளத்தைத் திட்டவட்டமாகக் குறித்திருக்குமேயானால், அது போற்றத்தக்கதாக இருந்திருக்கும். அதனைக் குறிக்காதது ஒரு பெருங்குறைதான். சுருங்கக்கூறின் ஆரம்பக் கல்வி மக்கள் வாழ்க்கைக்கான அடிப்படை அறிவைப் பயிற்றுவிக்கும் கருவியாக விளங்க வேண்டும்.

10 மொழிகள் வடமொழியைச் சார்ந்து இருக்கின்றன. தென்னாட்டில் 4 மொழிகள் தமிழைச் சார்ந்து இருக்கின்றன. அவை தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கும் ஆகும். அதனால் வடநாட்டில் 10 மொழிகளுக்குச் செய்யும், பண உதவியைத் தென்னாட்டிலுள்ள 4 மொழிகளுக்கும் கொடுத்துதவினால்தான், தமிழ் மொழி நன்றாகச் செழித்து வளரும்'' என்று குறிப்பிட்டுப் பேசப்பட்டிருப்பது சென்னை—இந்திய அரசுகளால் ஊன்றிக் கவனிக்கப்பட்டு ஆவன செய்யப்படவேண்டிய தொன்றாகும்.

எவ்வளவு பணக்காரர்களாக இருந்தாலும், சுலபமாக வெற்றி பெறும் வாய்ப்பைத் தன் வசம் உடையவர்களாக விருந்தாலும், அரசியல் பண்பில்லாத காட்டுமிராண்டிகளைத் தனது அரசியல் எல்லைக்குள் கூட நுழைய விடாமல் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு மற்றகட்சிகளைவிட ஆளும் காங்கிரசுக்கட்சிக்கு அதிகமாக இருத்தல் வேண்டும்.

நாட்டில் அரசியலா? கொலைக்களமா? என்ற வேறுபாடு தெரியாமல் நிலைமை வளருவது வருந்தத்தக்கதாகும்.

அரசியலா? கொலைக்களமா?

உத்திரப் பிரதேசத்தில் பாராபங்கி மாவட்டத்தில் பதும்பூர் என்ற கிராமத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்ட, அவது சரன் வர்மா என்ற சோசியலிசுட்டுக் கட்சியைச் சார்ந்த சட்டசபை உறுப்பினர் ஒருவரும், சயா ராம் என்ற பெயர்கொண்ட பிரசா சோசியலிசுட்டுக் கட்சியைச் சேர்ந்த ஊழியர் மற்றொருவரும், ஆயுதம் தாங்கிவந்த சுமார் 500 நபர்களால் அடித்துக் கொல்லப்பட்டார்கள் என்ற செய்தி வெளிவந்துள்ளது,

இதே இடத்தில் சென்ற மாதம் 7ல் பகவத் பிரசாத் சுக்லா என்ற காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த சட்டசபை உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்றும் அறிவிக்கப்படுகிறது.

நாகரிக உணர்ச்சிக்கு அதிர்ச்சி தரும் மேற்படி செய்தியைப்படித்த ஒவ்வொருவரும் தற்சமயம் நமது நாட்டில் குறிப்பாக வடநாட்டில் பொதுமக்களின் போக்கு எவ்வளவு பயங்கரமான நிலையில் கேவலமடைந்து வருகிறது என்பதை உணராமல் இருக்கமுடியாது. பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளச் செல்பவர்கள் உயிருடன் திரும்பமுடியாத நிலை நாட்டில் ஏற்பட்டிருப்பது அரசியல் அநாகரிக வளர்ச்சியைக் காட்டுவதாகும்.

அரசியல் கட்சி வேற்றுமை காரணமாகக் கூட்டத்தில் பேசவந்தவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

நாட்டில் பொதுத்தேர்தல் நடக்கவிருக்கும் இச்சமயம் இத்தகைய சம்பவங்கள் ஏனைய சில விடங்களிலும் நிகழ நேரிடும் என்பதை அரசாங்கம் நன்கு உணரவேண்டும். மாறுபட்ட கருத்துள்ள அரசியல் கட்சிகள் இயல்பாக வளர்ந்தால்தான் சனநாயகம் நிலைத்து நிற்க முடியும்.

அணுயுகமும் சாணியுகமும்

கல்கத்தா நகரில் நடந்த மாணவர்கள் கூட்டம் ஒன்றில் பண்டித நேரு பேசிக்கொண்டு வரும்பொழுது, "மற்ற நாடுகளில் மனிதன் அணு சக்தியைத் தனக்குச் சொந்தமாக்கிக்கொண்டுள்ள பொழுது நாம் மாட்டுச்சாணியை நம்பி இருக்கிறோம்'' என்று கூறியுள்ளார்.

முற்போக்கான நாடுகளுக்குச் சென்று சுற்றிப்பார்த்து, இன்ப வாழ்வு வாழும் பண்பட்ட மக்கள்கூட்டத்தை அங்கெல்லாம் கண்டு வியந்து வந்த பண்டிதர், சில சமயங்களில் கூட்டங்களில் பேசும்பொழுது, தனது உள்ளத்தில் உதயமாகும் முற்போக்கான கருத்துக்களை அப்படியே வெளியிட்டு விடுகிறார்.

பிற நாட்டார் அணுயுகத்தில் இருப்பதையும், இந்தியர் சாணியுகத்தில் இருப்பதையும் நேரு உணர்கிறார். ஆனால் இந்த இழிநிலை போக்கும் வழி காணாது ஏனோ தவிக்கிறார், தெரியவில்லை!

மூடநம்பிக்கைகளையும், குருட்டுப் பழக்க வழக்கங்களையும் போக்கும் சீர்திருத்தக் கருத்துக்களைக் கல்வி, சட்டம், பிரசாரம், நாடகம், சினிமா, வானொலி, பத்திரிகை, ஏடு போன்ற இவற்றின் மூலம் மக்கள் உள்ளத்திலே விதைத்தாலொழிய வேறு எவ்வழியில், சாணியுகத்தில் இருக்கும் மக்களை அணுயுகத்திற்கு அழைத்துச்செல்ல முடியும்? இம்முறைகளில் முயல நேருவின் அரசாங்கம் முன்வருமா? அரசாங்கம் முன்வராவிட்டாலும், இம்முறைகளில் மக்களைச் சீர்திருத்தமுயலும் சீர்திருத்த இயக்கங்களுக்குத் தடையும், தொல்லையும் விதிக்காமல் நேருவின் அரசாங்கம் இருக்குமா? சீர்திருத்த இயக்கங்களுக்கு இடங் கொடுத்தாலே சாணியுகம், அணுயுகமாக விரைவில் மாறிவிடுமே!

631

தொடர்கதை

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

கடிதங்கள்—முன்கிடந்தன.

சில நீண்ட கடிதங்கள், சில சுருக்கமாக இரண்டொரு வரிகளில் அடங்கியிருந்தன. எழுத்துக்கள், உணர்ச்சிவயப்பட்டு மிக அவசரமாக வரையப்பட்டிருந்தன.

கமலநாதனுல் அவற்றை முழுவதும் படிக்க முடியவில்லை. எழுத்துக்கள் அலேந்தன, பார்வை மங்கியது. நிழல் உருவத்தில் கடிதத்தின் ஓரம் தெரிந்தது. பின்பு இருள்.

கையைத் தலேயில் வைத்துக்கொண்டு கமலநாதன் உட்கார்ந்தான். "துரோகம்! துரோகம்! நான் எதிர்பார்க்கவேயில்லே!"

அவன் நம்பிக்கை வையத்தில், வாழ்வில்' அவன் வைத்த நம்பிக்கைகளெல்லாம் சிதறின, இல்லே—நொறுங்கின. இனி மீண்டும் அவைகளேச் சேர்க்கமுடியாதபடி.

வானம்—அதில் பூத்த முழுநிலவு. களிப்பைத்தரும் என்ற நம்பிக்கை. ஆனுல் ஒரு நொடியில் முழுமதி இருண்டது, வானம் இருண்டது, மின்னும் நட்சத்திரங்கள் ஒரேயடியாக விழுந்தன, பொலபொலவென்று, இருள்—எங்கும் இருள்—கமலநாதனின் கண்கள் குருடனேப்போலத் துழவின.

கடிதங்கள்—எவ்வளவு உரிமையுடன் குலசேகரன் எழுதியிருக்கிறுன்.

"உன்னேக் காதலிக்கும் குலசேகரன்."

'உனக்காகவே நான் காத்திருந்தேன். —நாளே மாலே சந்திக்கிறேன்.''

அவர்கள் நிச்சயம் ஒவ்வொரு மாலேயும் சந்தித்திருக்கிறுர்கள் என்பதில் சந்தேகமில்லே. அதை நினேக்கும்பொழுது கமலநாதனின் இரத்தம் கொதிப்பேறியது. தன்னே ஏமாற்றியதாக நினேத்து அவர்கள் சிரித்திருப்பார்கள். இனி அதன் பலனே அடையப் போகிறுர்கள்.

கடிதங்களில் இன்னும் மானசீகமான—கவியின் கற்பனேயில் சில இருந்தன.

"நீ சிறையிலே தள்ளப்படுகிறுய். நான் இங்கு தனியாய் நிற்கிறேன். உனக்கும் எனக்கும் இடையில் நீண்டதூரம், பெரும் சுவர்கள்! நீ ஒரு கைதி—நான் வெளியில் எதேச்சையாகச் சுற்றுவேன். ஆனுல் நான்தான் கைதியைப்போல் இருக்கிறேன். உனக்கு அல்ல, தண்டனே எனக்குத்தான் தரப்படும்."

வீடு அவளுக்குச் சிறையாக ஆகிவிட்டது போலும், கணவனுடன் வாழ்வது அவளுக்குத் தண்டனேயாக இருக்கிறதுபோலும். "வஞ்சகி!" என்று கமலநாதன் பற்களே நெறித்துக்கொண்டான்.

கடைசியாக இந்த கடிதத்தில் "நீ வெளிவரும்வரை நான் காத்திருப்பேன். உலகத்தின் தூற்றுதலுக்கு நான் பின்வாங்கமாட்டேன் என்பதையும் உனக்குத் தெரிவிக்கிறேன். அது குறித்து நீ தயங்கவேண்டாம், உன்னேக் காதலிக்கும்......"

கமலநாதன் தனக்கு வந்த ஆத்திரத்தில் ஜன்னல் கதவை வேகமாகத் தள்ளினுன். அதிலிருந்த கண்ணுடி கீழேவிழுந்து சிதறியது.

இப்பொழுது கிடைத்த கடிதங்கள் அவ்வளவுதான்! இதையல்லாமல் எவவளவு பறிமாறப்பட்டனவோ! இவைகளுக்கு என்ன "அழகான" பதில்கள் போனவோ!

கமலநாதன் உடல் பதைப்புடன் நின்றுன். வெளியில் கார்சத்தம் கேட்டது! ஓடிப்போய் வெளியில் பார்த்தான், தங்கத்தின் கார்!

கமலநாதன் பரபரப்புடன் கடிதங்களேப் பொறுக்கிப் பையில் போட்டுத் தன் பெட்டியில் போட்டு, அலமாரியை மூடி, சாவியை

மறுபடியும் முன்போல் வைத்தான்! இரும்பு அலமாரியைத் திறந்து தனது கைத்துப்பாக்கியை எடுத்துச் சரிபார்த்துத் தன் பையில் வைத்துக்கொண்டான்!

மேலே வந்ததும், தங்கத்திடம் கடிதங்களைக் கொடுக்கவேண்டும். அவள் திகைப்பாள், தயங்குவாள், தேம்புவாள். இரக்கங்காட்டாமல், கடிதங்களை அந்தக் கள்ளியை விட்டுப் படிக்கச்செய்யவேண்டும். கடைசிக் கடிதத்தைப் படித்ததும், துப்பாக்கியின் குண்டுகள்......

அவனையும் விடக்கூடாது, குலசேகரனுக்கு போன்பண்ணி வரவழைக்கவேண்டும், மாடி மீது தங்கம் காத்திருப்பாளென்று வேகமாக ஓடிவருவான். பிணத்தைக் கண்டதும், அவன் முகம் பயங்கரமடையும். மறுபடியும் துப்பாக்கிக்குண்டுகள்!

குற்றவாளிகள் அவர்களுக்குத் தண்டனை!

கமலநாதன் மாடியில் காத்திருந்தான்! தங்கம் மேலே வரவில்லை. மெதுவாக மாடிப் படியின்மீது குனிந்து பார்த்தான். தங்கமும், மற்றொரு லேடி டாக்டரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். அவனுடைய விரல்கள் நடுங்கின. துப்பாக்கியின்மீது சூடு தாக்கியது. உடனே சுட்டுவிடவேண்டும் போலிருந்தது.

அவள் பேசிக்கொண்டிருந்தாள். என்ன பேச்சு வேண்டியிருக்கிறது? துடிதுடிப்புடன் கமலநாதன் கீழே இறங்கிவந்தான்.

கைகளைப் பின்னால் கட்டிக்கொண்டு கமலநாதன் தனது அறைக்குள் போனான். தங்கமும், அவளுடன் உட்கார்ந்திருப்பவளும் பேசிக்கொள்வது கமலநாதனின் காதில் விழுந்தது. தங்கத்தைப் பார்க்காமல் வேறுபக்கம் திரும்பிக்கொண்டு, அவன் உட்கார்ந்தான். தங்கத்தைப் பார்த்தால் அவன் தன்னிலை மறந்து, சுட்டுவிடக்கூடும்.

"டாக்டர் சஞ்சீவி நாளையதினம் மாலை வந்துவிடுவார். நானும் நாளைக் காலைப் போகப் போகிறேன். நீதான், சுசிலா, சற்றுச் சிரமப்பட்டுப் பார்த்துக்கொள்ளவேண்டும்" என்று தங்கம் கேட்டுக்கொண்டாள்.

"ஒருநாள் பார்த்துக்கொள்வதில் என்ன? என் வார்டில் அதிக வேலை இருக்காது. நீ மூன்றுமாதம் லீவு போடப்போவதாகச் சொன்னார்களே!"

தங்கம் பெருமூச்செறிந்தாள். "ஓயாமல் உழைப்பது, மிகக் கடினமாக இருக்கிறது. சில சமயங்களில் மயக்கம் வந்துவிடும்போலிருக்கிறது. விடுமுறை வந்து ஓய்வு எடுத்தால்தான் சற்று நிம்மதி ஏற்படும்."

"ஆமாம்! அதனால்தான் நான் லீவு கிடைக்கும்போதெல்லாம் என் கணவருடன் வெளியூர் போய்விடுவது" என்று டாக்டர் சுசிலா சொன்னாள்.

தங்கம் பெருமூச்செறிந்தாள். "ஓய்வுக்காக, எல்லாவற்றையும் மறந்து, எங்கேயாவது போனால் நல்லது. நம் வாழ்வெல்லாம் சிறைச்சாலை வாழ்வுமாதிரி ஆகிவிட்டது."

"அதற்குள்ளே வேதாந்தம் பேச ஆரம்பித்துவிட்டாயா, நான் போகிறேன்" என்று சுசிலா கிளம்பினாள்.

கமலநாதன் தயாராக எழுந்தான். நேரம் ஆக, ஆக தன் கை வலுவிழப்பதுபோலிருந்தது. அதற்குள் டெலிபோன் மணி அடித்தது. தங்கம் எடுத்துப் பேசினாள்.

"சேகரா?"

கமலநாதனின் கை துப்பாக்கியைப் பிடித்தது. அந்தச் சொல்லை அவள் முடிக்குமுனபு சுட்டு வீழ்த்திவிடவேண்டுமென்றிருந்தது. மறுகணம் கமலநாதன் தன்னை அடக்கிக்கொண்டான். மேலும் என்ன பேசுகிறாள் என்று கவனிக்கத்தொடங்கினான்.

"ஆமாம், இன்னும் சாப்பிடவில்லை. நீ எப்பொழுது கிளம்புகிறாய்?"

மறுபக்கத்திலிருந்து பதில் வந்தது, கமலநாதனுக்கு என்னவென்று தெரியாது. ஆனால் குலசேகரன் பேசுகிறான் என்பதுமட்டும் அவனுக்குப் புரிந்தது.

"இன்று மாலையே கிளம்புகிறாயா?"

"...................."

"அப்படியென்ன வேலை?"

குலசேகரன் பதில் சொல்லும்பொழுது தங்கம் தன் கடியாரத்தைப் பார்த்துக்கொண்டாள்.

"நான் இப்பொழுது வரமுடியாது நான் காலையில் தோட்டத்துக்குப் போகவேண்டும். தோட்டக்காரன் இன்று வந்துவிட்டுப் போனான். அங்கு பத்து, பதினொரு மணிவரை இருப்பேன். அதற்குள் வந்தால், நீ அங்கு வா!"

குலசேகரன் ஏதோ பதில் சொன்னான்.

"சரி, சேகர்! நாளைக்குத்தானே விடுதலை நாள்! ஒரு சங்கடம் குறைந்துவிடும்."

பேச்சை முடித்துக்கொண்டு தங்கம் மாடிக்குப் போனாள்.

"நாளைக்கு உண்மையாகவே தண்டனை விடுதலை இரண்டும் கிடைத்துவிடும்." என்று கமலநாதன் முணு முணுத்துக்கொண்டான்.

மறுநாள் காலையில் ஏழுமணிக்கெல்லாம் தங்கம் தனது காரையெடுத்துக்கொண்டு தோட்டத்துக்குப் புறப்பட்டாள், அவள் அந்தத் தோட்டத்துக்குப் போய் ஓராண்டு ஆகிறது. போகும்பொழுது, வழியிலுள்ள மரங்கள், மற்ற தோட்டங்கள் முதலியவற்றைப் பார்க்கும்பொழுது கடைசித் தடவையாக அவளும் அவளுடைய கணவனும் சென்றது ஞாபகத்துக்கு வந்தது.

அந்த நாட்கள்! விடுமுறை கிடைக்கும் பொழுதெல்லாம் எவ்வளவு ஆவலுடன் அவர்கள் அந்தத் தோட்டத்துக்கு வருவது வழக்கம்! தோட்டத்தில், மாமரத்தின் நிழலில் அவர்கள் சிற்றுண்டி அருந்துவது; பின் அவள் கண்களை மூடி கனவு காண்பது, "நாழியாகிவிட்டது, எழுந்திரு தங்கம்!" என்று கணவன் அவள் கையைப் பிடித்துத் தூக்கி உட்காரவைப்பது; பின் காரில், காரிருளில், இருவரும் நகர்நோக்கி கிளம்புவது இவை தங்கத்தின் மனத்திரையில் வந்தது, கண்களில் பனிப்படலம் படர்ந்தது. காரை மெதுவாகப் போக்கினாள். அந்த நாட்கள் எங்கே? அப்பொழுது இருந்த குதுகலம், ஒளி இப்பொழுது எங்கே போய்விட்டன? இப்பொழுது அவள் மட்டும் தனிமையாக அந்த இடத்துக்குப் போய்க்கொண்டிருக்கிறாள். என்ன தவறு நிகழ்ந்துவிட்டது, குதுகலம் இருந்த இடத்தில் சோகம்படர, ஒளி இருந்த இடத்தில் இருள் சூழ? அன்று அவ்வளவு ஆர்வத்துடன், காதலுடன்—காதல் இன்று போய்விட்டது என்று தங்கத்தால் நினைக்க முடியவில்லை, ஆனால் அதிலிருந்த ஆர்வம் குறைந்துவிட்டது—தன்னை அழைத்துச்செல்லும் கணவன்—இப்பொழுது எங்கே?

வழியில் யாரோ கடந்து வந்தார்கள். காரை ஒதுக்கிச்செல்ல தங்கம் முயன்றாள். வழியில் நின்றவர் காரை நிறுத்துவதற்காக கையை உயர்த்தினார்.

காரின் வேகத்தைக் குறைத்து, தங்கம் பார்த்தாள். அவளால் நம்பமுடியவில்லை. காண்பது, கனவோ, நனவோ? எதிரே நின்றுகொண்டிருந்தது, கமலநாதன்தான்!

காரை நிறுத்தித் தங்கம் கீழே இறங்கி வந்தாள். அவளுடைய முகம் மகிழ்ச்சியில் ஆழ்ந்தது.

"நீங்கள் எங்கு......?"

"நான் நடந்துவந்தேன்."

"அப்பாடா, இவ்வளவு தூரமா? கால் வலிக்கவில்லையா?"

தங்கத்தின் முகத்தில் காணப்பட்ட புன்முறுவல், கமலநாதன் முகத்தில் பிரதிபலிக்கவில்லை.

"தோட்டத்துக்குப் போகிறேன். வருகிறீர்களா?"

"சரி, போகலாம்!"

கமலநாதன் காரில் உட்கார்ந்து ஓட்ட ஆரம்பித்தான். தங்கம் குதித்தோடிவந்து மறுபக்கத்தில் அவனுக்குப் பக்கத்தில் அமர்ந்துகொண்டாள். முன்பு எவ்வளவு தடவைகள் கமலநாதன் காரை ஓட்டிச் செல்ல, அவள் பக்கத்தில் அமர்ந்து பேசியபடி தூரத்தை, காலத்தைக் கடத்தியிருக்கிறாள்.

"வீட்டைவிட்டு நீங்கள் எத்தனை மணிக்கு கிளம்பினீர்கள்?"

"ஆறு மணிக்கு!"

"அதிலிருந்து நடந்துகொண்டே இருக்கிறீர்கள்? என்னிடம் சொல்லியிருந்தால், நானும் நடந்துவந்திருப்பேன்."

போகிற வழியில் தன்னைச் சந்தித்ததும், அவள் திடுக்கிட்டுவிடுவாள் என்று கமலநாதன் எதிர்பார்த்தான். மாறாக, அவள் உற்சாகத்துடனிருப்பது அவனுக்குப் புரியவில்லை. ஒருவேளை தான் நினைப்பது தவறோ? சே! எல்லாம் பசப்பு! நிலைமையைச் சமாளிக்க ஏதோ பேசுகிறாள். அதைக் கண்டு மயங்கிவிடக்கூடாது. கடிதங்கள்—மறைவாக வைக்கப்பட்ட காதற்கடிதங்களைப் பார்த்த பிறகும் அவளை நம்புவதா? பெண்ணாகி வந்த மாயப் பிசாசம் என்று நித்தியானந்த சாமிகள் சொல்வாரே, அது சரியாகத்தான் இருக்கிறது" கமலநாதன் நினைத்துக்கொண்டான்.

தங்கம் மெய்மறந்து இருந்தாள். "வீட்டிலிருந்து இவ்வளவு தூரத்துக்கப்பால் நாம் சந்திப்போமென்று நான் எதிர்பார்க்கவில்லை!" என்றாள்.

"இதுதான் கடைசி சந்திப்பு" என்று கமலநாதன் முணுமுணுத்துக்கொண்டான்.

(தொடரும்)

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு
சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்—ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :- வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

மலாயாத் தமிழர்களுக்கு ஓர் நற்செய்தி! டெலிபோன் நெ. 22

அவ்வை புத்தக நிலையம்

142, ஜாலான் இட்ரீஸ்-கம்பார். (மலாயா)

எங்களிடம்!

தமிழ்நாட்டின் பிரபல எழுத்தாளர்களின் கருத்தோவியங்களும் அறிவூட்டும் நாவல்களும் துப்பறியும் கதைகளும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடுகளும், (சினிமா) கதை வசனபாட்டு புத்தகங்களும், கலர் படங்களும், தாயகத்திலிருந்து வரும் வார, மாத பத்திரிகைகளும், ஸ்டேசனரி சாமான்களும், காலண்டர்; மற்றும் ஆங்கில காமிக்ஸ், மேக்கிசன் & நாவல்களும் மலாய் நாவல்களும் எப்பொழுதும் கிடைக்கும்.

குறிப்பு : வியாபாரிகளுக்கு தக்க கழிவு உண்டு.

வெளியூர் ஆர்டர்களை தாமதமின்றி கவனிக்கப்படும். உடன் தொடர்பு கொள்க.

AVVAI BOOK STALL

142, JALAN IDRIS, KAMPAR. Tel. No. 22. PERAK, MALAYA.

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்—ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :- வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை
3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

மலாயாத் தமிழர்களுக்கு ஓர் நற்செய்தி! டெலிபோன் நெ. 22

அவ்வை புத்தக நிலையம்

142, ஜாலான் இட்ரீஸ்-கம்பார். (மலாயா)

எங்களிடம்!

தமிழ்நாட்டின் பிரபல எழுத்தாளர்களின் கருத்தோவியங்களும் அறிவூட்டும் நாவல்களும் துப்பறியும் கதைகளும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடுகளும், (சினிமா) கதை வசனபாட்டு புத்தகங்களும், கலர் படங்களும், தாயகத்திலிருந்து வரும் வார, மாத பத்திரிகைகளும், ஸ்டேசனரி சாமான்களும், காலண்டர்; மற்றும் ஆங்கில காமிக்ஸ், மேக்கிசன் & நாவல்களும் மலாய் நாவல்களும் எப்பொழுதும் கிடைக்கும்.

குறிப்பு : வியாபாரிகளுக்கு தக்க கழிவு உண்டு.

வெளியூர் ஆர்டர்களை தாமதமின்றி கவனிக்கப்படும். உடன் தொடர்பு கொள்க.

AVVAI BOOK STALL

142, JALAN IDRIS, KAMPAR. Tel. No. 22. PERAK, MALAYA.

கண்களையும் கன்னங்களையும் கைகளால் மூடிய வண்ணம் குந்தியிருக்கிறாள்,

"கண்ணே! ஏன் இப்படி அஞ்சுகிறாய்? என்மீது உனக்குச் சினமா? எழுந்திருக்கமாட்டாயா? இதோ பார்! என்னைத் தலைநிமிர்ந்து பார்க்கமாட்டாயா? என்மீது உனக்கு அன்பு இல்லையா? எழுந்திரு கண்ணே? எழுந்திருக்க மாட்டாயா? நான் செய்தது தவறா? தவறு என்றால் மன்னித்துவிடு, அன்பே! நீ ஏன் இப்படி அஞ்சுகிறாய்? இங்கு ஒருவருமில்லையே! நீயும் நானும் மட்டுந்தானே இருக்கிறோம்! என்மீது வருத்தமா? சொல்லு கண்ணே! உன்மீது எனக்கு எவ்வளவு அன்பு தெரியுமா? அதனால்தான் கட்டியணைத்து முத்தமிட்டேன்! அது தவறா, கண்ணே? தவறு என்றால் இனி விட்டுவிடுகிறேன்! எழுந்திரு, கண்ணே! எழுந்திரு! எங்கே, என்னைப் பார்க்கமாட்டாயா?" என்று தலைவன் தலைவியைக் கேட்டுக் கேட்டுக்கொண்டே, அவளைப்பிடித்து அணைத்துத் தூக்கி நிறுத்த முயலுகிறான்.

தலைவி கூச்சத்தாலும், அச்சத்தாலும் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்துப் போயிருக்கிறாள். பிறகு திடீரென்று அவன் பிடிகளினின்றும் தன்னை உதறிக்கொண்டு ஓட்டமாக ஓடிவிடுகிறாள்.

தலைவன், "தலைவியின் முழு அன்பைப் பெறமுடியாமல் போய்விட்டேனே! என்மீது வெறுப்புக்கொண்டுவிட்டாளோ? இனி என்னைப் பார்க்க வரமாட்டாளோ? நான் அவள் முகத்தை என்றென்றும் பார்க்கமுடியாமல் போய்விடுமோ? சேச்சே! நான் என்ன தவறு செய்துவிட்டேன்? என்ன இருந்தாலும் அவ்வளவு அவசரப்பட்டிருக்கக்கூடாது! இனி என் செய்வது?" என்ற ஏக்க வுணர்வோடு, ஆற்றாமை தாளாமல் தன் வீடு நோக்கிச் செல்கிறான்.

இல்லம் சென்று சேர்ந்த தலைவி, "அவரை உதறித் தள்ளிவிட்டு வந்துவிட்டோமே! அவர் என்ன நினைத்துக்கொள்வாரோ? என்ன இருந்தாலும் நான் அவ்வளவு பிடிவாதம் செய்திருக்கக்கூடாது? அவர் அவ்வளவு கெஞ்சியபோது அவருக்கு ஆறுதலாக ஏதேனும் சொல்லியிருக்கலாம்! இனி என்னைக் காண வருவாரோ, வரமாட்டாரோ? 'பிறகு பார்க்கிறேன்' என்று சொல்லிவிட்டு வந்திருக்கலாம்! அதைக்கூடச் சொல்லாமல் வந்துவிட்டேனே! அவர் அன்போடுதானே அணைத்தார்! ஏன் அவ்வளவு அவசரப்பட்டு அவரைத் தடுத்துவிட்டேன்? இனி அவரைக் காணமுடியுமோ, முடியாதோ?" என்றுதனக்குள்ளே எண்ணி ஏங்குகிறாள்.

இருவரும் ஒருவரை ஒருவர் காணமுடியாமல், வீட்டைவிட்டு வெளியே புறப்படாமல், அவரவர் வீடுகளில் தங்கிவிடுகிறார்கள். சிலநாட்கள் கழிகின்றன. 'தலைவி எங்கேனும் தென்படுகிறாளா என்று பார்ப்போம்' என்று எண்ணிக்கொண்டு தலைவன் பூம்பொழில் பக்கம் உலாவப் போகிறான். 'தலைவர் பூம்பொழில் பக்கம் வருகிறாரா என்று பார்ப்போம்' என்று கருதிக்கொண்டு தலைவியும் பூம்பொழில் பக்கம் செல்கிறாள். எதிர்பார்த்துக்கொண்டு சென்றதற்கிணங்க, தலைவி பூம்பொழிலில் இருக்கக் கண்ட தலைவன் பெருவியப்பும், பெருமகிழ்ச்சியும் அடைகிறான். தலைவி தலைவனைக் கண்டதும் ஒருபக்கம் மகிழ்ச்சியும், ஒருபக்கம் நாணமும் கொண்டவளாய், அவனைப் பார்க்காதவள்போல் வேறுபக்கம் திரும்பிக்கொள்கிறாள்.

தலைவன் துணிவை வரவழைத்துக்கொண்டு மெல்ல சென்று அவள் பின்பக்கம் நிற்கிறான். தலைவன் மெல்லவந்து தன் பின்பக்கம் நிற்பதைத் தலைவி கடைக்கண்ணால் ஒருவாறு உணர்ந்துகொள்கிறாள். அவளிடம் எப்படிப் பேச்சுக்கொடுப்பது என்று தெரியாமல் தலைவன் சிறிதுநேரம் விழித்துக்கொண்டு நிற்கிறான். பிறகு துணிந்து, "நங்கையே' என்மீது உனக்குச் சினமா?" என்று கேட்கிறான்.

தலைவி அவன் வந்ததை அறியாதவள் போல் திரும்பி அவனை ஒரு பார்வை பார்த்துவிட்டு, நாணத்தால் புடவையின் முந்தாணியின் நுனியை வாயில்வைத்துப் பல்லால் மெல்ல கடித்துக்கொண்டு, தலையைத் தாழ்த்திப் பார்வையை நிலத்தின்மீது செலுத்திக்கொண்டு, காலின் பெருவிரலால் நிலத்தைக் கிண்டிக்கொண்டு இருக்கிறாள்.

"கண்ணே! அன்று நான் உன்னை இறுகத் தழுவிக்கொண்டு, உன்னிடம் அன்புரைகள் சில சொல்லும்போது, அவற்றை ஏற்றுக்கொள்ளாதவள்போல், உன்னுடைய அழகிய முகத்தை மறைத்துக்கொண்டு, கண்களை மூடிக்கொண்டு, தலையைத் தொங்கவைத்துக்கொண்டு இருந்துவிட்டாயே! ஏன் அப்படிச் செய்தாய்? என்னிடத்தில் உனக்கு ஏன் அவ்வளவு வெட்கம்?" என்று தலைவன் அவளைக் கேட்கிறான். தலைவி விடை ஏதும் பகராமல் அப்படியே நிற்கிறாள்.

தலைவன் மேலும் தொடர்ந்து, "நங்கையே!

நான் உன்னிடத்தில் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறேன், தெரியுமா? உன்னிடம் நான் கொண்டுள்ள காதலன்பு அளவுகடந்து மிகும் போது, நான் அதனை எப்படித் தாங்கிக் கொண்டிருக்கமுடியும்? அந்த நிலையில் நான் உன்னை ஆரத்தழுவாமல் எப்படி இருக்கமுடியும்? நீயே சொல்லு?'' என்று கேட்கிறான். அதற்கும் அவள் ஒன்றும் சொல்லாமல் நிற்கிறாள்.

அவளைப் புகழ்ந்து சில சொல்லுவதன் மூலம் அவளின் அன்பைப் பெறலாம் என்று என்று எண்ணிக்கொண்டு, அவளைப் பற்றிப் புகழ்ந்து கூற முற்படுகிறான். தான் ஒரு போர்வீரன் என்ற பெருமிதத்தை அவளிடம் காட்டிக்கொள்ளவேண்டும் என்ற எண்ணத்துடன், போர்வீரனோடு தொடர்புடைய உவமைகளைக்கூறி அவளைப் புகழ முற்படுகிறான். ''பெண்ணே! பெரிய வரிப்புலி நடுங்குமாறு, அதனுடைய முதுகிலே குத்தி, அதனை வீழ்த்தி, விளையாடி மீளும் யானையின் வெண்மையான கொம்புகள் குருதிக்கறைபடிந்து எப்படிச் சிவந்து காணப்படுமோ, அப்படி உன்னுடைய வெண்மையான கண்கள் சினத்தால் சிவந்து காணப்படுகின்றனவே! இது தகுமா?'' என்று கேட்கிறான். அதற்கும் அவள் வாய்பேசாமலே நிற்கிறாள்.

தான் பாண்டிய மன்னனோடும், அவனது போர்ப்படையோடும், அவனது வளமிக்க மதுரைமாநகரோடும் தொடர்புடையவன் என்பதைக் காட்டிக்கொள்ள, அதுபற்றிய செய்திகளை உவமையாகக் கூறி அவளது தோள்களைப் புகழ எண்ணுகிறான். ''அன்பே! உன்னுடைய தோள்கள் எவ்வளவு அழகாகவும், வளப்பமாகவும் இருக்கின்றன தெரியுமா? அவற்றில் எழுதப்பட்டிருக்கும் தொய்யிலோவியம் எவ்வளவு அழகாக இருக்கின்றது? ஆகா! பகைவர்கள் மதில்புறத்திடத்தே வந்துவிட்டால், உடனே மேல் விழுந்து சென்று பகைவரது முரசத்தைக் கைப்பற்றி அவர்களது படைகளையும், கோட்டைகளையும் அழிக்கும் பாண்டிய மன்னனது பெரும் புகழையுடைய மதுரை எவ்வளவு வளப்பமாக இருக்கின்றதோ, அவ்வளவு வளப்பமாக இருக்கின்றன உன்னுடைய தோள்கள்! உன்னுடைய கண்களும் தோளும் என்னை எவ்வளவு வாட்டி வதைக்கின்றன தெரியுமா? நீ ஏதும் அறியாதவள்போல் இருக்கிறாயே என்பதுதான் எனக்கு வருத்தமாக இருக்கிறது'' என்று தலைவன் புகழ்ச்சிச் சொற்களை வீசிப் பார்க்கிறான். தலைவி அதற்கும் வாய்திறந்தபாடில்லை. தலைவனின் கூற்றுகேட்டு தலைவி தனக்குள்ளாகவே சிரித்துக்கொள்கிறாள். அவள் முகத்தில் சிரிப்பின் குறிப்பு தோன்றுவதைத் தலைவன் பார்த்துவிடுகிறான்.

''கண்ணே! இனி என்னால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது! நீ இப்படிப் பிடிவாதம் செய்துகொண்டிருப்பதை இனியும் நான் தாங்கிக்கொண்டிருக்க முடியாது! நானே உன்மீது விழுந்து முயங்கப்போகிறேன்! உன் இனிய கண்களால் என்னை நயந்து நோக்கி, உன் அழகிய தோள்களால் என்னை இறுகக் கட்டியணைத்து முயங்கமாட்டாயா?'' என்று தலைவன் அன்புடன் நயமாய் வினவுகிறான்.

அப்பூங்கொடியாள், தலைநிமிர்ந்து புன்சிரிப்பை அவன்மீது வீசுகிறாள். உடன் அவன் அவளைக் கட்டி அணைத்து முத்தமிட்டு மகிழ்ந்தின்புறுகிறான்!

∴ ∴ ∴

நற்றிணை 39-ம் செய்யுளின் கருத்தே கதைப் போக்கில் மேலே தீட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இந்தச் செய்யுளை இயற்றியவர் மருதனிளநாகனார் என்ற பெரும்புலவராவார். தலைவன் இரண்டாங் கூட்டத்தின்போது தலைவியை எதிர்ப்பட்டுக் கூறியதாக இந்தச் செய்யுளில் கருத்து வைக்கப்பட்டிருப்பதால், இது குறிஞ்சி ஒழுக்கத்தின்பாற்பட்டதாகும்.

சொல்லிற் சொல்லெதிர் கொள்ளாய் யாழநின்
திருமுகம் இறைஞ்சி நாணுதி கதுமெனக்
காமம் கைமிகின் தாங்குதல் எளிதோ
கொடுங்கேழ் இரும்புற நடுங்கக் குத்திப்
புலிவிளை யாடிய புலவுநாறு வேழத்தின்
தலைமருப்(பு) ஏய்ப்பக் கடைமணி சிவந்தநின்

கண்ணே கதவ அல்ல நண்ணார்
ஆண்டலை மதிலர் ஆகவும் முரசுகொண்டு
ஓம்பரண் கடந்த அடுபோர்ச் செழியன்
பெரும்பெயர்க் கூடல் அன்னநின்
கரும்புடைத் தோளும் உடையவால் அணங்கே.

[நற்றிணை—39]

[பொழிப்புரை : நங்கையே! நான் உன்னைத் தழுவிக்கொண்டு சில அன்புரைகள் கூறினால், அவற்றை ஏற்றுக்கொள்ளாதவள்போல், உன் அழகிய முகத்தைத் தாழ்த்தி வைத்துக் கொண்டு, கண்ணை மூடிக்கொண்டு வெட்கப்படுகின்றாய்! விரைவாக, காமமானது கைகடந்து மிகுமேயானால், அதனை நான் தாங்கிக்கொள்ளுதல் எளிதான ஒரு செயல் ஆகுமா? புலி நடுங்குமாறு அதன் வளைந்த கரியநிறமுள்ள வரிகளையுடைய பெரிய முதுகிலே குத்தி வீழ்த்தி விளையாட்டயர்ந்த புலவு நாற்றத்தையுடைய யானையின் இனிய நுனியையுடைய கொம்புபோலக் கடைமணி சிவந்த உன்னுடைய கண்கள்தாம் சினந்து காணப்படுகின்றனவே! அவை மட்டுமல்ல, பகைவர் அரண் மிக்க மதிலிடத்தில் வரவும், உடனே மேல்வீழ்ந்து வென்று அவரது முரசைக் கைக்கொண்டு அவரால் பாதுகாக்கப்படுகின்ற அரணையும் கைப்பற்றிய போரில் கொல்லவல்ல பாண்டியனது பெரிய புகழையுடைய மதுரையைப் போன்ற உன்னுடைய தொய்யிலெழுதப்பட்ட கரும்புபோன்ற தோள்களும் என்னை வருத்துகின்றன! தெரியுமா?

இறைஞ்சி - தாழ்த்தி ; கதழும் - விரைவாக ; கொடும் - வளைந்த ; இரும்புறம் - பெரிய முதுகு ; வேழம் - யானை ; மழுப்பு - கொம்பு ; நண்ணார் - பகைவர் ; ஆண்டலை - அரண்மிக்க.]

ஃ ஃ ஃ

காதலியை முதன்முறையாகக் காதலன் கட்டியணைக்கும்போது, காதலி எப்படிப்பட்ட அச்சத்திற்கும், நாணத்திற்கும் உள்ளாவாள் என்பதுபற்றிய மெய்ப்பாட்டுணர்ச்சிகளை இச்செய்யுள் மிக அழகாக எடுத்துரைக்கின்றது.

திருமணம் நடைபெறுவதற்கு முன்பு காதலனும், காதலியும் களவொழுக்கத்தில் மெய்தொடுதல், கட்டித் தழுவுதல், முத்தமிடுதல் போன்ற மெய்யுறுபுணர்ச்சிகளில் ஈடுபடுவதைப் பண்டைத் தமிழகம் ஏற்றுக்கொண்டிருந்தது என்பதை இச்செய்யுளால் இனிதே உணரலாம். இக்காலத்தில் மேனாட்டார் போற்றிக்கொள்ளும் அத்தகைய சிறந்த பழக்கம், பண்டைத் தமிழகத்தில் மிகச்சிறப்பாகப் போற்றப்பட்டுவந்தது என்பது பெருமிதங்கொள்ளுவதற்குரியதாகும்.

வெண்மையான கண்கள் சினத்தால் சிவந்து காணப்படுவதற்கு, சினங்கொண்ட யானையின குருதி தோய்ந்த கொம்புகளை உவமையாகக் கூறியிருப்பதும், தோள்களின் நலன்களுக்குப், புகழ்வாய்ந்த மதுரையின் நலன்களை உவமையாகக் கூறியிருப்பதும் நயம் நிறைந்தவைகளாகும்.

பாண்டியனையும், அவனது வீரத்தையும் ஆற்றலையும், அவனது மதுரை மாநகரையும் புகழ்ந்து சொல்லவேண்டும் என்று எண்ணங்கொண்ட புலவர் மருதனிளநாகனார் இந்தச் செய்யுளை ஏற்ற முறையில் பயன்படுத்திக் கொண்டு, தம் கருத்தை அழகுற விளக்கியுள்ளது மகிழ்வதற்குரியதாகும்.

சிறுகதை

தண்டனை

[ராதா]

"கண, கண" வென்று ஒலித்துக்கொண்டிருந்த அலாரம் கடிகாரத்தை இடது கையால் அடக்கிவிட்டுப் புரண்டு படுத்தேன். ரயிலில் வந்த களைப்பு இன்னும் தீரவில்லை, ஆனல் தூக்கமும் வரவில்லை. கண்ணை மூடிக்கொண்டு சிந்தனையிலாழ்ந்தேன். ராஜாவைச் சந்தித்தால் சென்ற நான்காண்டுகளின் சென்னைச் சம்பவங்களையும், முக்கியமாக ராஜாவின் 'அவளை'ப் பற்றியும் தெரிந்துகொள்ளலாம் என்று எண்ணினேன். எழுந்து மணியைப் பார்த்தேன். நாலேகாலாகியிருந்தது. படுக்கையைச் சுற்றிவைத்துவிட்டு ஜன்னல் வழியாக வீதியைப் பார்த்தேன். எதிரேயிருந்த சினிமாக் கொட்டகையின் முன் பெருங்கூட்டம் ஒருவரையொருவர் முட்டிக்கொண்டு காத்திருந்தது, "பைத்தியக்காரன்" என்ற படத்தைப் பார்ப்பதற்காக. பைத்தியக்கார ஜனங்கள் என்று எண்ணிக்கொண்டே முகங்கழுவச் சென்றேன். உடைகளை மாற்றிக்கொண்டு வெளிக் கிளம்புவதற்குள் மணி ஐந்து அடித்துவிட்டது. கீழே இறங்கிவந்து வீதியில் சிறிதுநேரம் நின்றுகொண்டிருந்தேன். பக்கத்திலிருந்த ஹோட்டலைப் பார்த்ததும் காப்பி சாப்பிடலாம் என்ற எண்ணம் எழுந்தது. பையில் பர்ஸ் இருக்கிறதா என்று பார்த்து உறுதிப்படுத்திக்கொண்டு ஹோட்டலுக்குள் நுழைந்தேன்.

மறுகணம் நான் திகைத்து நிற்கவேண்டியதாயிற்று. ஒரு மூலையில் ராஜாவைப்போல்—ராஜாவேதான் உட்கார்ந்திருந்தான். ராஜாவைக் காணவேண்டுமென்று புறப்பட்டிருந்தாலும், அவனே இப்படி திடீரென்று தோன்றுவான் என்று எதிர்பார்க்கவில்லை. நான் பம்பாய் சென்றபின் ராஜாவுக்கு ஒரு கடிதம் கூடப் போடவில்லை. ஆகவே அவனைப் பார்த்துப் பேசுவதற்கே ஒரு பயம் ஏற்பட்டது. நிதானமாக அவனைப் பார்த்துக்கொள்ளலாம் என்று எண்ணி அவன் காணுதவாறு திரும்பினேன். ஆனல் அவன் என்னைப் பார்த்துவிட்டான்போலிருக்கிறது. நான் வீதியில் இறங்கியதும் ஒரு ஆள் என்னிடம் வந்து, "அவர் கூப்பிடுகிருர்" என்று சொன்னன். வேறு வழியின்றி புதிதாக யாரையோ பார்ப்பதுபோல் பார்த்து ராஜாவைப் பார்த்ததும், ஒரு புன்னகையைச் சிரமப்பட்டு வரவழைத்துக்கொண்டு சென்றேன்.

"என்னடா, மேகநாதா! பிரமாதமாக நடித்துவிட்டதாக எண்ணிக்கொள்ளுகிருயோ? நீ வீதியில் நின்று யோசித்துக்கொண்டிருந்தபோதே நான் உன்னைப் பார்த்துவிட்டேன்!"

"அப்ப, நீ தான் பெரிய நடிகனுகியிருக்கிருய்! இன்னமும் அந்தக் குறும்புச் செயல் உன்னை விட்டபாடில்லை போலிருக்கிறது. ஆமாம்—ஏதாவது வேலை, கீலை பார்க்கிருயா இல்லை...."

"என் வேலை இருக்கட்டும். நீ பம்பாய் சென்றபின் இந்த நாலு வருஷத்திலே ஒரு கடிதமாவது போட்டாயா?"

"போட்டிருந்தா உடனே பதில் எழுதிட்டுதான் மறுவேலை பார்த்திருப்பாய். ஏன், நீதான் ஒரு கடிதம் போட்டிருக்கக்கூடாதா?"

"ஏய்! முட்டாள்தனமா பேசாதே. நான் எப்படி எழுதுவது? விலாசம்? 'கேர் ஆப் பாம்பே' என்று போடுவதா? நீ பம்பாய் சென்றிருக்கிருய் என்பதுகூட யாரோ கூறித்தான் தெரியும்"

"டேய்! டேய்! நிறுத்து. சரணுகதி அடைந்துவிட்டேன் இனிமே பேசாதே!"

"அப்படியா இரு, உனக்கு தக்க பாடம் கற்பிக்கணும். முதலில் காப்பியைச் சாப்பிடு."

"இப்ப உன்னுடைய சமூகச்சீர்திருத்தத் திட்டங்களெல்லாம் எப்படி இருக்கு? முக்கியமானதைக் கேட்க மறந்துவிட்டேனே! ஏண்டா 'அவள்'...?"

"அவளா? யார் அந்த அவள்?"

"நான் எவளைப்பற்றிடா முக்கியமா கேட்பேன்?"

"உனக்கு எல்லாரையும்தான் முக்கியமாத் தோன்றும்."

"கேலி போதும், விஷயத்துக்கு வா. உன்னுடைய 'அவள்'......இப்போது......"

"ஓகோ திலகாவைப் பற்றியா கேட்கிறாய்?"

"ஆமாம்!"

"சௌக்கியமாக இந்த சென்னைமாநகரில்தான் இருக்கிறாள்."

"அது சரிடா, உன்னுடைய காதல் என்னவாயிற்று?"

"இன்னும் காதலித்துக்கொண்டுதானிருக்கிறேன்."

"என்னடாயிது, நாலு வருஷமாச்சு இன்னும் என்று இழுக்கின்றாயே! அவளைப் பார்ப்பதாவது உண்டா?"

"அடிக்கடி பார்த்துக்கொண்டேயிருக்கிறேன்."

"இப்போது ஏதாவது பேச்சுவார்த்தைகள்......?"

"பேச்சா? அவளைக் கண்டுவிட்டால் எனக்குப் பேச நா எழுவதேயில்லை. அவளது பார்வை என்னை மயக்கிச்சிலையாக்கிவிடுகிறது. அவளது அழகை அள்ளிப் பருகுவதற்கே நேரம் சரியாகிவிடுகிறது."

"சரியான பைத்தியக்காரனடா நீ."

"உண்மையில் பைத்தியக்காரனைப் பார்க்கவே அவளும் வந்திருக்கிறாள்."

"எங்கே? எங்கே?" என்று கேட்டுச் சுற்றிலும் பார்த்தேன்.

"இங்கே இல்லை. அதோ!" எதிரேயிருந்த சினிமாக் கொட்டகையைச் சுட்டிக்காட்டினான்.

"ஓகோ சினிமா பார்க்க வந்திருக்கிறாளா? ஆமாம். நீ மட்டும் ஏன் இங்கே உட்கார்ந்திருக்கிறாய்? நீயும் உள்ளே போயிருக்கலாமே! நல்ல சந்தர்ப்பத்தை இழந்துவிட்டாயே!"

"அவள் தனியாக வரவில்லை தாயுடன் வந்திருக்கிறாள்."

"அப்ப, அவளைப் பார்ப்பதற்காக மட்டும் சினிமா விடுகிறவரை இங்கே காத்திருக்கப் போகிறாயா?"

"வேறு வழி!......இரு, இதோபோய் சிகிரெட் வாங்கிவந்துவிடுகிறேன்." ராஜா எழுந்து வெளியே சென்றான்.

ராஜாவின் நிலையைப் பார்க்க எனக்கு ஆச்சரியமாக இருந்தது. கல்லூரிப் படிப்பின் போது ஆரம்பமாகிய அவனுடைய காதலில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. அப்போதும் திலகாவுடன் நெருங்கிபேசும் வாய்ப்பினை ஏற்படுத்திக்கொள்ளத் தயங்குவான். அவளுடன் பேசுவதற்கும் அவனுக்குத் தைரியம் வராது. நல்ல சமயங்கள் பல ஏற்பட்ட போதும் அதைப் பயன்படுத்திக்கொள்ள முன்வரவில்லை. அன்றிருந்த அதே நிலையில்தான் ராஜா இன்னும் இருக்கிறான். மேலும் திலகாவின் தந்தை சச்சிதானந்தம் பிள்ளையோ பழுத்த வைதீகர், பெரும் பணக்காரர். முதலியார் குலத்தில் தோன்றிய ராஜாவுக்கும் திலகாவிற்கும் திருமணம் நடைபெற ஒருபோதும் சம்மதிக்கமாட்டார். நாங்கள் அப்போது எவ்வளவோ கூறியும் ராஜா, சீர்திருத்தம் கலப்புமணம் என்று ஏதேதோ கூறித் தலைகால் தெரியாமல் குதித்தான். இப்படியே என் எண்ணம் கல்லூரி வாழ்க்கையைப் பற்றிச் சென்றது.

கையில் சிகிரெட்டுடன் ராஜா வந்தான்.

"வா, வெளியில் சென்று நிற்போம். சினிமா முடியும் நேரமாகிவிட்டது."

ராஜா பில்லுக்கு பணம்கொடுத்தான். இருவரும் வெளியில் வந்து நின்றோம். கொட்டகையிலிருந்து ஜனக்கும்பல் வெளிவர ஆரம்பித்தது. ராஜா வைத்தகண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தான். நான்காண்டுகளாக நான் பார்க்கவில்லையாதலால் எனக்குத் திலகாவின் அடையாளம் தெரிகிறதோ இல்லையோ என்று எண்ணினேன்.

"அதோ பார்!" என்றான் ராஜா.

அவன் சுட்டிய இடத்தை நோக்கினேன். திலகா தன் தாயுடன் வந்துகொண்டிருந்தாள். திலகாவின் தோற்றத்தில் மாறுதல் எதுவும் இல்லை.

"என்டா அவள்......" என்று நான் ராஜாவின் தோள்களைத் தட்டிப்பேச ஆரம்பித்ததும், "கொஞ்ச நாழி பேசாம இருடா" என்று கூறி ராஜா தன் பார்வையைக் கூர்மையாகத் தீட்டினான். திலகாவும் அவள் தாயாரும் அங்கு நின்றுகொண்டிருந்த ஒரு காரில் ஏறினார்கள். முதலில் திலகா ஏறி எங்கள் பக்கமுள்ள ஓரத்தில் உட்கார்ந்தாள். டிரைவர் கதவைச் சாத்தி; திலகாவிடம் ஏதோ கூறிவிட்டு முன் சீட்டிற்குச் சென்றான். கார் கிளம்பும் சமயம் எங்கள் பக்கம் திரும்பிய

திலகா எங்களைப் பார்த்துவிட்டாள். அவள் கண்களில் ஒளி வீசியது; புன்னகை தவழ மலர்முகத்தைக் காட்டினாள். கார் நகர்ந்து விட்டது.

"பார்த்தாயா! இப்படித்தான் அவள் என்னைப் பார்க்கும்போதெல்லாம் கொன்றுவிடுகிறாள்!"

"உன்னுடைய நிலையில் அப்போதைக்கு இப்போது ஒரு மாற்றமும் இல்லை. ஆனால் அவளிடத்தில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. உன்னுடைய காதல் வெற்றியடையவேண்டுமானால் நீ தைரியமாக இருக்கவேண்டும், இன்னும் தொடைநடுங்கியாக இருக்கக்கூடாது."

"அவளைக் கண்டாலே எனக்கு உடம்பெல்லாம் நடுங்குகின்றது-"

"சரி, உனக்காக வேண்டுமானால் நான் அவளைத் தனியாகச் சந்தித்து உன்னுடைய காதலை அவளிடத்தில் கூறட்டுமா?"

"உன்னால் முடியுமா?"

"முடியுதா இல்லையான்னு பிறகு பார்! ஆமாம், அவள் இப்போ அதே வீட்டில் தானே...?"

"இல்லை. வாரத்திற்கு ஓரிரு முறை அந்த வீட்டிற்கு வந்து தங்குவாள்."

"வந்து தங்குவாளா? மற்ற நேரங்களில்?"

"அவளுடைய கணவன் வீட்டில்!"

ராஜா மிகவும் சாதாரணமாகச் சொன்னான். எனக்குப் பேரிடிபோல் கேட்டது. கொஞ்ச நேரம் எனக்கு ஒன்றும் புரியவில்லை. ராஜா ஏதேனும் வேடிக்கையாகத்தான் பேசுகிறானோ என்று எண்ணினேன்.

"ஏண்டா, வேடிக்கையாகப் பேசுகிறாயா?"

"வேடிக்கையல்ல—உண்மைதான். திலகாவின் திருமணம் நடைபெற்று இரண்டு மாதங்களாகின்றது. அவளது கணவன்—வேந்தன என்று பெயர்—ஏதோ பத்திரிகையில் ஆசிரியராம்" தரையைப் பார்த்துக்கொண்டே ராஜா கூறினான்.

ராஜாவின் காதல் தோல்வியுற்றதற்காக வருந்துவதா அல்லது திலகாவின் திருமணத்திற்குப் பிறகும் அவன் தனது காதலை நீடிப்பதற்காகக் கண்டிப்பதா என்று ஒன்றும் புரியாத நிலையில் இருந்தேன். ராஜாவும் பேசாமல் இருக்கவே, நானே பேச்சைத் துவங்கினேன்.

"மற்ற விஷயங்களிளெல்லாம் வீராதி வீரனாக இருக்கும் நீ, திலகாவுடன் முன்பே பேசி விருப்பத்தைத் தெரிவித்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது.

இப்போது என்ன செய்யப்போகிறாய்?

ஆமாம்...அவள் உன்னைக்கண்டு நகைத்தாளே, அப்படிச் செய்ததின் அர்த்தம் என்ன?

அவளுக்குத் திருமணமாகியும் நீ அவளை நேசிக்கலாமா?"

மடமடவென்று கேள்விகளைப் போட்டேன்.

"அதுதான் பெரிய கதை. இப்போது சொல்ல நேரமில்லை. உனக்கு என் வீட்டில் தான் இரவுச் சாப்பாடு. சாப்பிட்டபின் பேசிக்கொள்ளலாம். வா" என்று என்னை அழைத்தான்.

ராஜாவுக்கும் திலகாவிற்கும் கள்ளக்காதல் ஏற்பட்டிருக்கிறதென்பதை இப்போதுதான் என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. முழுவிபரத்தையும் அறிந்துகொள்ளவேண்டுமென்று எண்ணி ராஜாவின் அழைப்பை ஏற்றுக்கொண்டேன்.

ராஜாவின் வீட்டையடையும்போது மணி ஏழரையிருக்கும். வீட்டின் முன்பக்கம் ஒரே இருட்டாக இருந்தது. ஹாலில் நாற்காலியில் அமர்ந்தேன். ராஜா உள்ளே சென்றான். அங்குள்ள பொருள்களை பார்த்தேன். ஒரு மூலையில் புத்தர் சிலையொன்று வைக்கப்பட்டிருந்தது. ஏதேதோ புத்தகங்கள் அடுக்கிய பீரோவ் ஒன்றும் இருந்தது. "நன்றுயிரு நல்லதைச் செய்" என்ற வாசகத்துடன் ஒரு அட்டை சுவற்றில் தொங்கிக்கொண்டிருந்தது. ஒரு சிறிய மேசையின்மேல், பல பத்திரிகைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. இவையெல்லாம் ராஜா ஒரு சீர்திருத்தவாதி என்று எடுத்துக்காட்டிக்கொண்டிருந்தது. ஆனால் எனக்கு ராஜாவிடம் வெறுப்புதான் ஏற்பட்டது. இங்கே சீர்திருத்தம்! அங்கே திலகா வீட்டு—ராஜா மனைவியிடம் கள்ள நட்பு! இதைக் கண்டிக்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டிருக்கையில் ராஜா அங்கு வந்தான்.

"என்ன, வீடு எப்படியிருக்கிறது பார்த்தாயா?"

"அது சரிதான். நீ..." என்று நான் ஆரம்பிப்பதற்குள் ராஜா என்னருகே வந்து, மெதுவாக,

"ஏய்! இங்கே திலகாவைப் பற்றி எதையும் பேசாதே! என் மனைவி கேட்டுவிட்டால் அவ்வளவுதான்!...கொஞ்சம் இரு, எலுமிச்சம் பழம் 'ஐஸ்' பிழியச் சொல்லியிருக்கிறேன், போய்க் கொண்டுவந்துவிடுகிறேன்."

ராஜா மறுபடியும் உள்ளே சென்றுவிட்டான். என்னுடைய ஆத்திரம் அதிகரித்தது. இதுவரை ராஜா தனக்கு மணமாகிவிட்டதென்று கூறவே இல்லையே! மணமாகியபின் மாற்றான் மனைவியை விரும்புவதென்றால்? ராஜாவின் போக்கு எனக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை, அவனை மேலும் பார்க்க விரும்பாமல் போய்விட எண்ணி மெதுவாக எழுந்து வெளியில் வந்தேன். ஆனால் வாசற்படியில் அடிவைக்கும்பொழுது, உள்ளிருந்து கூப்பிடும் குரல் கேட்டது. பெண் குரலாக இருந்ததால் ராஜாவின் மனைவியாகத்தான் இருக்கும் என்று எண்ணினேன்.

"இந்தாங்க, எங்கே போறீங்க! இதைச் சாப்பிடுங்கள்!" என்றாள் அந்த மாது.

"இல்லை, நான்......நான்......" என்று ஆரம்பித்து என்ன கூறுவதென்று தெரியாமல் திணறியவாறு திரும்பினேன். கையில் கோப்பையுடன் நின்றுகொண்டிருந்த அம்மாதை ஏறிட்டுப் பார்த்தேன். என்னிலை தடுமாறி தலை சுழல ஆரம்பித்தது!

என் எதிரே திலகாதான் நின்றுகொண்டிருந்தாள்!

உள்ளேயிருந்து ராஜா பெருஞ்சிரிப்பு சிரித்துக்கொண்டே வந்தான். திலகா என்னருகே வந்து கோப்பையை என்கையில் கொடுத்துவிட்டுத் திரும்பினாள். நான் இருட்டில் நின்றுகொண்டிருந்ததால் என் முகத்தை நன்றாகப் பார்க்கவேண்டி வராண்டாலைட்டைப் போட்டு ராஜா மேலும் சிரிக்க ஆரம்பித்துவிட்டான்.

சுவற்றில் ஒரு போர்டு தொங்கவிடப்பட்டிருப்பது வெளிச்சத்தில் தெரிந்தது. "வேந்தன் ஆசிரியர், புதுமலர்" என்று எழுதப்பட்டிருப்பதைக் கண்டேன். ராஜா என்பதை வேந்தன் என்று மாற்றிக்கொண்டிருக்கிறான்.

ஒரு நாடகம் நடத்தி என்னை ஏமாற்றிவிட்டான் என்பதை நினைக்க ஒருபுறம் கோபமும், மறுபுறம் ஏமாந்துவிட்டோம் என்பதால் வெட்கமும் எனக்கு உண்டாயிற்று. அவன் சிரிப்பது என் வேதனையை அதிகப்படுத்தியது.

"ஏண்டா, இந்த நாடக ஏற்பாட்டிற்காகத்தான் சிகிரெட் வாங்க வெளியே சென்றவன் அவ்வளவு நாழி கழித்து வந்தாயோ?"

திலகாவும் ராஜாவுடன் சேர்ந்து சிரிக்க ஆரம்பித்துவிட்டாள்.

"என்னை ஏன் ஏமாற்றினாய்?"

"உன்னை நீயே ஏமாற்றிக்கொண்டாய்! இந்த நான்காண்டுகளாக என்னை மறந்து வாழ்ந்தாயல்லவா? அதற்கு இது மிகக் குறைந்த தண்டனை! ஆனால் நாட்டை மறந்து, நாட்டவர் படும் துயர் களைய எண்ணம் இல்லாமல், நாட்டு முன்னேற்றத்தில் சிறிதும் பங்குகொள்ளாது ஒதுங்கி வாழத்துணியும் உன்போன்றாரை வருங்காலம் தூற்றியே தீரும். அதுவே உனக்குப் பெருந்தண்டனையாகும்!" ராஜா ஒரு குட்டிச் சொற்பொழிவை நிகழ்த்திவிட்டான்!

இதற்குள் ஒரு கார் வந்து வீட்டின் முன் நிற்கவே என் கவனம் அங்கு சென்றது. திலகா ஏறிவந்த அதே கார்தான்! டிரைவர் என்னைப் பார்த்ததும் சிரித்துவிட்டான். காரிலிருந்து ஒரு பெரியவர் இறங்கினார். அடடே! சச்சிதானந்தம் பிள்ளை! விபூதிப்பட்டை, உத்திராட்சக் கொட்டை எதையுமே காணோமே.

என்னால் எதையும் நம்பமுடியவில்லை! எல்லாம் மாறிவிட்டன!

சிலந்திக்கூடு

[இரா. செழியன்]

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

காட்சி 3.

[திவான்பகதூர் திருவேங்கடம் பிள்ளை வீட்டின் உட்புறம். சோபாவில் படுத்துக் கணக்குப் புத்தகங்களைக் காலுக்கும் தலைக்கும் போட்டுக்கொண்டு, சாரங்கன் தூங்குகிறன் செங்கமலம் குப்பை கூட்டிக்கொண்டு உள் வருகிறுள்.]

செங் : அப்பாடா! வீடு முழுவதும் கூட்டி முடிவதற்குள் போதுமென்ருகிவிடுகிறது. (விளக்குமாற்றைத் தட்டிக் கயிற்றை இறுக்குகிருள்.)

சார : (தூக்கத்தில் புரண்டு) பிரதர்!

[செங்கமலம் சுற்றிலும் பார்த்துவிட்டுக் கூட்டுகிருள்.]

சார : (சிரித்து) என்ன பிரதர்! உனக்கு என்ன வேணும் சொல்லிடு, ஒரே வார்த்தையில்!

[செங்கமலம் சாரங்கன் பேசுவதை ஆச்சரியத்துடன் பார்க்கிருள்.
சமையற்காரன் ஐயாசாமி காப்பித் தம்ளருடன் வருகிருன்.]

சமை : சின்ன ஐயா, இங்கேதான் படுத்திருக்காரா? அவர் இருக்கிற இடத்தைக் கண்டுபிடிக்க எவ்வளவு நாழி பிடிக்கிறது. இன்றைக்காவது இந்த சோபாவில் படுத்திருக்கிருர். ஒவ்வொரு நாள் மாடிப்படிக்கட்டு, தோட்டம், வாசல், கார், எங்கேயாவது, பாவம்! படுக்கிறபோது எங்கேயிருக்கோமின்னு தெரிஞ்சாதானே? எத்தனை மணிக்கு வீடுவந்து சேர்ந்தாரோ, தெரியலே! என்ன, செங்கமலம்?

செங் : என்ன கேட்கிறே?

சமை : சின்ன எசமானுவது எப்படியோ ராத்திரி வீடு வந்து சேர்ந்துவிட்டாரு. கோமளாம்மா இருக்காங்களே, அவங்க இன்னும் வீடுவந்து சேரலே!

செங் : ராத்திரி வரலியா? நேற்று எல்லா இடத்திலும் போய்த் தேடிட்டு வந்தேன்.

சமை : பெண்ணு சீக்கிரத்தில் பேரெடுத்துடும்! (சுற்றிலும் பார்த்துவிட்டு, செங்கமலத்தின் பக்கத்தில் வந்து) ஸ்பெஷல் காபியா உனக்கு ஒரு தம்ளர் போட்டுத் தரட்டுமா?

செங் : (முறைத்துப் பார்த்து) கையிலே என்ன இருக்குதுன்னு பார்த்துவிட்டுப் பேசு!

[திவான்பகதூர் திருவேங்கடம் பிள்ளை, கையில் துளசி மாலையுடன் "நாராயணு, நாராயணு!" என்று உச்சரித்துக்கொண்டு வருகிருர்.]

சமை : (அவசரமாக) சீக்கிரமாக வந்து பாத்திரத்தைத் தேய்த்து வைத்துவிட்டுப் போ! எனக்கு வேலே டில்லே ஆகுது! (போகிருன்.)

திவா : காலேன்னு பரபரப்பா வேலேயைப் பார்க்காம, இங்கே கூடிக் கதைபேசறிங்களே! ஏந்தான் இப்படி சோம்பேரிகளாக இருந்து வயிறு வளர்க்கப் பார்க்கிறீங்களோ, நீங்க, தெரியலே.

[செங்கமலம் குப்பைக் கூடையுடன் போகிருள்.]

திவா : நாராயணு! நாராயணு! (சாரங்கன் படுத்திருப்பதைப் பார்த்து) நீ இங்கேயா படுத்திருக்கிறே! ராத்திரி சாப்பிட்டானே என்னவோ தெரியலே! டேய்! சாரங்கா! சாரங்கா!

[சாரங்கன் கண்ணேத் துடைத்துக்கொண்டு எழுந்து உட்காருகிருன்.]

திவா : ராத்திரி சாப்பிட்டியா?

சார : அதெல்லாம் ஒன்னும் நான் சாப்பிடலியே !

திவா : வெறும் வயிற்ருேடா வந்து படுத்துக்கொண்டே ?

சார : இல்லே, இல்லே, சதாசிவம் வீட்டில் சாப்பிட்டுவந்தேன்.

திவா : எத்தனே மணிக்கு வந்தே ?

சார : பத்துமணிக்கு வந்தேன்.

திவா : பொய் சொன்னுலும் சரியாச் சொல்லு நான் படுக்கப் போகும்போது மணி பதினென்று ! அதுவரைக்கும் நீ வரவில்லே.

சார : அப்போ, நான் வரும்பொழுது மணி பதினென்னேகால் இருக்கும். கொஞ்சம் நாழியாயிட்டுது அதுதான் தூக்கம் !

திவா : தூக்கமின்னு இப்படியா ? காலே எட்டு ஒன்பது மணிவரை ?

சார : (எழுந்து) அப்படி என்ன மணி அதிகமா ஆயிட்டுது ! (மேஜைப்பக்கம் போய்ப் பார்த்துவிட்டுச் சுற்றுமுற்றும் பார்க்கிருன்.)

திவா : என்னடா, பார்க்கிறே ?

சார : என் கைக்கடியாரத்தைக் காணும் !

திவா : நன்ருகப் பாரு ! எங்கே வைச்சே ?

சார : இங்கேதான் ராத்திரி வைச்சேன். காணும் !

திவா : (அருகில் போய் நன்ருகப் பார்த்து) உண்மையாகவே இங்கே வைத்துக் காணுமற்போயிட்டுதா, இல்லே எங்கேயாவது வித்துக் காசைக் கரியாக்கிவிட்டு, இங்கே வந்து கதை பண்றியா ?

சார : ராத்திரி மணி பார்த்துவிட்டு, இங்கேதான் வைத்தேன் !

திவா : நல்லாத் தேடிப்பாருடா ! கடியாரம் முந்நூறும், சங்கிலி இருநூற்றைம்பதும், ஆறு நூறு ரூபாய்க்குக் குறையாது !

(கணக்கப்பிள்ளே எழுமலே தேடிப் பார்த்துக்கொண்டு வருகிருன்.)

ஏழு : அப்பாடா ! கடைசியாக அகப்பட்டு விட்டது !

திவா : (ஆவலுடன்) எங்கேயிருந்தது ?

ஏழு : இதோ, இருக்குதே ?

சார : இங்கே காணுமே ?

திவா : ஏழுமலே ! எதைக் கண்டுபிடித்துவிட்டதாக நீ கூச்சல் போட்டே !

ஏழு : இந்தக் கணக்குப் புத்தகங்களேத்தான் ! காலேயில் வந்து பார்த்ததும், கணக்குப் புத்தகங்களேக் காணும் !

திவா : சரி, சரி ! உன் இராமாயணத்தை ஆரம்பித்துவிடாதே ! சாரங்கன் வைத்திருந்த கைக்கடியாரத்தைக் காணும் !

ஏழு : எங்கே போயிட்டுது ?

திவா : அது தெரியாமத்தான் தேடுகிருேம் ! சாரங்கா ! நல்லா ஞாபகப்படுத்திப்பாரு !

சார : எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு, இந்த மேஜைமேல், இந்த இடத்தில்தான் வைத்தேன் !

திவா : பின்னே எப்படி மறைந்துவிடும் ?

ஏழு : காலேயில் யாராரு இங்கே வந்தது ?

திவா : வேலேக்காரியும் சமையற்காரனும் இங்கே இருந்தாங்க ! ஏழுமலே, இரண்டு பேரையும் கூப்பிடு ! (ஏழுமலே போகிருன்.)

(திவான்பகதூர் "நாராயணு, நாராயணு !" என்று உச்சரித்துத் துளசி மாலேயைச் சுழற்றிக்கொண்டிருக்கிருர். சாரங்கன் கீழே குனிந்து தேடிப் பார்க்கிருன்.

செங்கமலம் வருகிருள், ஏழுமலே கணக்குப் புத்தகங்களே அடுக்கிவைக்கிருன்.)

திவா : இந்தா, நீ காலேயில் கூட்டினபோது, வாட்ச் இருந்ததே பார்த்தியா ?

செங் : வாத்தா ?

திவா : வாத்துமில்லே, தவக்களேயுமில்லே !

செங் : தவக்களேதான் ஒன்று வந்தது, அதைக் கூட்டி வெளியே தள்ளினேன், அது வேணுங்கிளா ?

திவா : வாட்சுடி ! கையிலே கட்டிக்கிற கடியாரம், மணிபார்க்கிற கடியாரம் !

ஏழு : அது கீழே விழுந்துகிடந்திருக்கிறதைப் பார்த்தியா ?

செங் : நான் பார்க்கலிங்களே !

திவா : நீ கூட்ட வருகிறப்போ, இங்கே யாரு இருந்தா ?

செங் : சின்ன எசமான்தான் இருந்தார், பேசிக்கிட்டு!

திவா : யாரோடு?

செங் : அதுதான் நானும் பார்த்தேன். வேற ஒருத்தரையுங் காணோம்; தானாகவே அவர் பேசிக்கொண்டிருந்தார்.

திவா : அவன் என்னசெய்வான், அவனா பேசிக்கொண்டிருந்தான், அவனுக்குள்ளே இன்னொரு ஆள் இருந்துகிட்டில்லே பேசியிருக்கான்!

ஏழு : இந்தா! செங்கமலம்! கீழே கிடந்து எடுத்திருந்தா கொடுத்துவிடு!

திவா : ஏதோ, சிறிசு! எடுத்துவைச்சிருந்தா கொடுத்துடு! உன்னை நாங்க ஒன்னும் செய்யமாட்டோம்.

செங் : எனக்கு ஒன்னுமே தெரியாதுங்களே!

ஏழு : ஐயா நயமாக் கேட்கிறாங்க! அப்புறம் போலிசு வந்தால், இப்படிக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டிருக்கமாட்டாங்க!

திவா : உண்மையா ஒப்புத்துக்கொண்டா தப்புச்சே, இல்லே போலிசில் ஒப்படைச்சுடுவேன்!

செங் : எடுத்திருந்தா தானுங்க பயம், நல்லா போலிசைக் கூப்பிடுங்க!

திவா : ஏழுமலை! போலிசைக் கூப்பிட்டுக் கொண்டுவா! இன்னைக்குக் கடியாரம் கிறது, நாளைக்குக் காசுமாலையே காணாமற் போயிடும்.

ஏழு : (கணக்குப் புத்தகங்களைத் தூக்கிக் கொண்டு) இந்தப் புத்தகங்களையெல்லாம் பத்திரமா வைத்துவிட்டு, போலிசைக் கூப்பிட்டு வருகிறேன்! (போகிறான்)

[செங்கமலம் போக எத்தனிக்கிறாள்.]

திவா : நீ எங்கேயும் போகாதே! போலிஸ் வருகிறவரை இங்கேயேதான் இருக்கணும்.

[சமையற்காரன் ஐயாசாமி வருகிறான்.]

திவா : ஐயாசாமி! நீ காப்பி கொண்டாந்தபோது, செங்கமலம் இங்கே இருந்தாளா?

ஐயா : அவள் சொல்றதைக் கொஞ்சங்கூட நம்பாதிங்க!

திவா : அதுக்குத்தான் உன்னைக் கூப்பிட்டது.

ஐயா : அவள்கிட்ட ஒருவார்த்தை நான் பேசலை!

திவா : அப்பொழுது சாரங்கன் தூங்கிக் கொண்டிருந்தானா?

ஐயா : ஆறிப்போன காப்பித்தூள் தண்ணி இருந்தது. கீழே கொட்றதுக்குப் பதில், அவளுக்குத் தருகிறதாச் சொன்னேன். அவ்வளவுதான்.

திவா : செங்கமலம் சும்மா நின்றுகொண்டிருந்தாளா? ஏதாவது மறைக்கப் பார்த்தாளா?

ஐயா : நான் பேசறதில் ஒளிவு மறைவு கிடையாதுங்க, உண்மையாச் சொல்றேன். நான் வித்தியாசமா எதுவும் பேசலிங்க!

திவா : நான் ஏதோ கேட்டா, இவன் ஏதோ பேசிக்கொண்டே போகிறான். ஐயாசாமி! அந்த மேஜைமேலிருந்த கைக்கடியாரம் காணாமற்போயிட்டுது. அதுக்குத்தான் உன்னைக் கூப்பிட்டது!

ஐயா : காணாமற்போயிட்டுதா, எப்படி?

திவா : நீ எங்களைக் கேட்க ஆரம்பித்துட்டியா, சரி! நீ வந்தபோது மேஜைமேல் சாரங்கன் கைக்கடியாரம் இருந்ததைப் பார்த்தியா?

ஐயா : அந்த மேஜைமேல்தானுங்களே?

திவா : ஆமாம், ஆமாம்!

ஐயா : அதிலே ஒன்னுமில்லிங்களே! நான் காப்பி வைச்சபோது, அதிலே ஒன்னுமில்லை.

திவா : நல்லா ஞாபகம் இருக்கா?

ஐயா : நான்தான் துணியால் தட்டிவிட்டு வைச்சேன், கடியாரம் இருந்தா தெரிந்திருக்கும்!

திவா : ராத்திரி வைத்த கடியாரம், காலையில் நீ பார்க்கிறப்போது இல்லை. (செங்கமலத்தைப் பார்த்து) மத்தியில் நீதான் இங்கே வந்திருக்கே! உன்னையல்லாமல் எங்கே போயிடும்?

செங் : நான் பார்க்கவேயில்லிங்க! இந்தப் பழிக்குதாங்க, பெரிய இடத்தில் வேலைக்கு வரப் பயப்படறது.

ஐயா : (செங்கமலத்தின் பக்கம் வந்து) இந்தா செங்கமலம்! நீயும் அறியாத பொண்ணு, ஏதோ தெரியாத்தனமா எடுத்திருந்தா என்கிட்ட கொடுத்துடு. ஐயாகிட்ட சொல்லி, ஒன்னும் பண்ணவேண்டா முன்னு சொல்லிடறேன்!

செங் : ஐயோ, நான் எடுக்கவே யில்லிங்க!

(கணக்குப்பிள்ளை, சப் இன்ஸ்பெக்டர், ஒரு கான்ஸ்டேபிள் மூவரும் வருகிறார்கள்.[

திவா : போலிசும் வந்துட்டுது, கடைசியாக் கேட்கிறேன். இருந்தா கொடுத்துவிடு!

செங் : சத்தியமா சொல்றேன், நான் ஒரு பாவமும் அறியேனுங்க!

இன்ஸ் : குட்மானிங், சார்! ரிஸ்ட் வாட்ச் காணமற்போயிட்டுதாமில்லே!

திவா : ஆமாம்! ராத்திரி இந்த மேஜைமேல் வைச்சது, காலையில் பார்த்தா காணோம்!

இன்ஸ் : யார் எடுத்தது?

திவா : என்ன இன்ஸ்பெக்டர், அதுக்குத்தான் உங்களைக் கூப்பிட்டது, நீங்களே அந்தக் கேள்வியைக் கேட்கிறீங்களே?

இன்ஸ் : அந்தக் கேள்வி என்னையே நான் கேட்டுக்கிறேன். திருட்டு அப்படியென்றால், திருடன் என்று ஒருத்தன் இருக்கனும். திருட்டுப்போன சாமானைக் கண்டு பிடிக்கவேண்டுமென்றால், திருடினது யார் என்று கண்டுபிடிக்கவேண்டும். இதெல்லாம் எங்கள் வேலையின் நுணுக்கங்கள். உங்களுக்குப் புரியாது! சரி, கேசைப் பார்க்கலாம்! (குறிப்புப் புத்தகத்தை எடுத்து) கடியாரம் யாருடையது?

திவா : நம்ம பையன் சாரங்கனுடையது.

இன்ஸ் : (சாரங்கனைப் பார்த்து) ராத்திரி எத்தனை மணிக்கு கடிகாரத்தை அந்த இடத்தில் வைச்சிங்க?

[தூக்க கலக்கத்தில் இருக்கும் சாரங்கன் பதில் சொல்லமுடியாமல் விழிக்கிறான்-]

திவா : பதினொன்னரை மணி இருக்கும்!

இன்ஸ் : சரியான நேரம்தானே?

திவா : அவன் அந்த இடத்தில் கடியாரத்தை வைத்தபொழுது, நான் மணி பார்த்து விட்டுப் படுக்கப்போனேன். அதால்தான் சரியாகச் சொல்லமுடியுது!

இன்ஸ் : வாட்ச் என்ன மாடல்?

திவா : ரோலக்ஸ், கோல்ட் செயின்!

இன்ஸ் : ரொம்ப காஸ்ட்லியாயிருக்குமே!

திவா : அறுநூறு ரூபாய்!

இன் : எந்த இடத்தில் ராத்திரி அந்த வாட்சை வைச்சிங்க?

திவா : இந்த மேஜைமேல்தான்.

இன் : (கான்ஸ்டேபிளைப் பார்த்து) போர்டொன்டி ஒன்! இந்த மேஜையின் அளவை எடு!

கான் : (அளந்து) இரண்டு அடி ஒன்னரை அங்குலம், இரண்டு அடி எட்டங்குலம், மூன்று அடி இரண்டேகால் அங்குலம்!

இன் : இதுமாதிரி சின்ன பாயின்டெல்லாம் மிக முக்கியமாயிருக்கும். இந்த மேஜை என்ன மரத்தில் செய்யப்பட்டது?

கணக் : கருங்காலி மரத்தில், விலை இருபத்து மூன்று ரூபாய், ஐந்தே முக்காலணு!

இன் : உங்களுக்கு யார் பேரிலாவது சந்தேகம் உண்டா?

திவா : அப்படிச் சொல்ல முடியவில்லை......

கண : காலையில் இங்கேவந்தது வேலைக்காரி செங்கமலம், இரண்டாவதாக வந்தது, சமையற்காரன்.

இன் : (செங்கமலத்தைப் பார்த்து) உம்பேர் என்ன?

செங் : நான் அந்தக் கடியாரத்தைப் பார்க்கவே யில்லிங்க!

இன் : (அதட்டி) பேர் என்ன?

செங் : செங்கமலம்.

இன் : நீ எங்கே குடியிருக்கிறது?

செங் : நான் அந்தக் கடியாரத்தைப் பார்க்கவே யில்லிங்க!

கண : பின்னாலே இருக்கிற தோட்டத்தில், ஒரு குடிசையில்! அந்தக் குடிசையை வாடகை வாங்காமல் நம்ம எசமான் விட்டார், தயாளத்துடன்!

திவா : ஆமாம் நாம், எவ்வளவு தாராளமாக

இருந்தாலும் அவர்களுக்குள்ள சின்ன புத்தி போகமாட்டேங்குது!

இன் : நீ எடுத்த கடியாரத்தை எங்கே வைச்சிருக்கே? அல்லது யாரிடமாவது கொடுத்துட்டியா?

செங் : ஐயோ! சத்தியமாச் சொல்றேன் எனக்கு ஒன்றும் தெரியாது. நான் கடியாரத்தை எடுக்கலிங்க!

இன் : இப்படியெல்லாம் நயமாக் கேட்டா வெளிவராது, ஸ்டேஷனுக்கு இழுத்துக் கொண்டுபோய் மிரட்டினால், உண்மை வெளிவந்துவிடும் (சமையற்காரனைப் பார்த்து) உம்பேர் என்ன?

ஐயா : ஐயாசாமி—ஐயாசாமிப் பிள்ளேங்க. சைவ வேளாளப் பிள்ளே.

இன் : இவன் எங்கே இருக்கிறான்?

திவா : சமையற்கட்டுக்குப் பக்கத்தில் ரூமில்! ஆனால் இவன் எடுத்திருக்கமாட்டான்.

இன் : சொல்லமுடியாது. பெரிய இடங்களில் திருட்டுப்போவுதுன்னா, வேலைக்காரங்க தான் எடுத்திருப்பாங்க! எதற்கும் நான் போய் இவங்க இரண்டுபேர் இருக்கிற இடத்தையும் சோதனை போட்டுப் பார்க்கிறேன். பின்னால் ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போகலாம்.

திவா : ஏழுமலை! இன்ஸ்பெக்டரோடு போய் அந்த இடத்தையெல்லாம் காண்பி!

[இன்ஸ்பெக்டர், கான்ஸ்டேபிள், ஏழுமலை, செங்கமலம், ஐயாசாமி முதலானவர்கள் போகிறார்கள்.

சாரங்கன் மறுபக்கம் போக அடி வைக்கிறான்.]

திவா : டேய் சாரங்கா! யோக்கிதையா, அந்தஸ்தா, பெரிய வீட்டுப் பையனா ஏண்டா இருக்கமாட்டேங்கிற? நாலுபேர் உன்னைப் பற்றிச் சொன்னா, அது நம்ம குடும்பத்துக்கே தலையிறக்கந்தானே!

சார : நான் என்னப்பா செய்துட்டேன்?

திவா : வாயைத் திறந்து பதில் சொல்லாதே, நாத்தம் சகிக்க முடியலே! திருட்டுக் குற்றத்தைக் கண்டுபிடிக்கவந்த இன்ஸ்பெக்டர், உன்னை சரியாகப் பார்த்திருந்தால், முதலில் உன்னை இழுத்துக்கொண்டு போயிருப்பான், மதுவிலக்கை மீறிய குற்றத்துக்காக! பெரிய இடத்துப் பையனா, லட்சணமா இருக்கத் தெரியலியே? உன்னோடே சிநேகிதன் சதாசிவம் இருக்கானே அவன் எவ்வளவு அடக்கவொடுக்கமா, கௌரவமா இருக்கான், அவனைப் பார்த்தாவது நல்லபடியா நீ ஏன் இருக்கப்படாது!

சார : நேற்று அவன்தானப்பா என்னோடு இருந்தது......

திவா : இருக்கட்டுமே! ஆனால் அவனைப் பற்றி ஒரு புகாரும் வருகிறதில்லையே! உன்னை மாதிரி, நடு ரோடில் தள்ளாடி வந்தான், மரத்தோடு பேசிக்கொண்டிருந்தான் இப்படியெல்லாம் சேதி வரலியே! அவன் கௌரவத்தை, பெரிய இடத்துப் பையன் என்பதைக் காப்பாத்திக்கிறான்! சரி, போய், பல் தேச்சு, குளிச்சிட்டு இரு! இன்ஸ்பெக்டர் வருவதற்குள் சரியான நிலைக்கு வந்துடு!

[ஐயாசாமி வேகமாக உள்ளே வருகிறான்.]

ஐயா : எசமான், கடியாரம் கிடைச்சுட்டுதுங்க.

திவா : எங்கேயிருந்தது?

ஐயா : செங்கமலம் குடிசையில்தான்!

திவா : அவள் திருட்டுமுழி முழிச்சப்போதே எனக்குத் தெரியும், அவள் எடுத்திருப்பாள்னு!

ஐயா : சின்ன ஐயா! இந்தக் காப்பியைக் குடிச்சுடுங்க!

திவா : அவனுக்கெதுக்கடா காப்பி! இன்னும் இரண்டு நாளைக்கு வேண்டியதைத்தான் அவன் வயிற்றில் ஊற்றிக்கொண்டு வந்திருக்கானே! குளிச்சபின்னே அவன் காப்பி சாப்பிடுவான். நீ அதை எடுத்துக் கொண்டு போ!

[ஐயாசாமி காப்பித் தம்ளரை எடுத்துக்கொண்டு போகிறான். சாரங்கன் பின்தொடர்ந்து போகிறான்.

திவான்பகதூர் துளசிமாலையை உருட்டி, "நாராயணா! நாராயணா!" என்று சொல்ல ஆரம்பிக்கிறார்.

இன்ஸ்பெக்டர், ஏழுமலை, செங்கமலம், கான்ஸ்டேபிள் உள் வருகிறார்கள்.]

இன் : பார்த்தீங்களா சார்! நான் சொன்னபடியே ஆச்சுது; எப்பவும் பெரிய இடத்

தில் திருட்டுப்போவுதுன்னு, வெளியே எங்கேயும் போய்விடாது, வீட்டிலே வேலை செய்கிறவங்கதான் நோட்டம் வைத்து எடுத்திருக்கனும். இவள் குடிசையைச் சோதனை போட்டபோது கிடைச்சுது. இந்தா! எப்போ இதை எடுத்தே?

[செங்கமலம் பேசாமல் நிற்கிறுள்.]

கான் : ஸ்டேஷனுக்கு அழைத்துப்போய் கேட்டா உண்மையைக் கக்கிவிடுவாங்க!

செங் : எசமான்! ஏதோ தப்பு வந்துட்டுதுங்க! இந்தத் தடவை மன்னிச்சுடுங்க, இனிமே ஒரு குத்தமும் வராதுங்க!

திவா : காலையில் கேட்டபோது, ஏன் அப்படி ஒரேயடியாக மறைத்துப் பேசினியே! அப்போ கொடுத்திருந்தால் போலிசே வந்திருக்காதே! நயமாக் கேட்டதுக்குக் கூட போலிசு வரட்டும் பயமில்லை என்று எவ்வளவு தைரியமா இவள் வீராப்பு பேசினுள் தெரியுமா?

செங் : சாமி! உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டு! என்னை எப்படியாவது மன்னிச்சுடுங்க! இவ்வளவு நாளா உங்க வீட்டில் நாய்மாதிரி வேலை செய்திருக்கிறேன். ஒரு தப்பு தண்டா வந்ததில்லை.

திவா : இன்னைக்கிக் கண்டுபிடிச்சிட்டோம், இதுக்குமுன் இதுமாதிரி எவ்வளவு காணுமற்போயிருக்கோ தெரியாது.

இன் : திவான்பகதூர் சார்! இவள் குடிசையில் இந்த வாட்சு மட்டுமல்ல, ஒரு சில்க் சட்டைகூட இருந்தது. அந்தச் சட்டைப் பையில்தான் இந்த வாட்சு இருந்தது. சட்டையைப் பார்த்தால், அதுவும் உங்க வீட்டிலிருந்துதான் திருட்டுப்போயிருக்க வேண்டும்.

கான் : இதோ! அந்த சட்டை இருக்குங்க!

[ஒரு சட்டையைக் காண்பிக்கிருன்]

திவா : இந்த சட்டை என்னுடையதுதான்! பழசாகிப்போயிட்டுதுன்னு, டிரைவர் வேலுக்குக் கொடுத்தேன். அவன் நேற்று கூட இதைத்தான் போட்டிருந்தான். அவன் சட்டை இவள் குடிசைக்கு எப்படி வந்தது?

ஏழு : இப்போ புரியுது, டிரைவர் வேலு நேற்று ராத்திரி இவள் குடிசைக்கு வந்திருப்பான்!

ஐயா : இருக்குங்க. தனியா இருக்கும்போது டிரைவரும், இவளும் அடிக்கடி பேசிக் கொள்வாங்க! அந்த விஷயம் இப்போ தான் புரியுது.

செங் : ஐயோ! அப்படியெல்லாம் இல்லாதும் பொல்லாதும் சொல்லாதீங்க!

இன் : யார் அந்த டிரைவர்?

திவா : ஏழுமலை! அந்த சோம்பேரி கார்ஷெட்டில் தூங்குவான், போய் இழுத்துக் கொண்டுவா!

[ஏழுமலை போகிருன்.]

(தொடரும்)

அட்டைப்படம்

கி. மு. இரண்டாம் நூற்றுண்டில் வாழ்ந்த அப்பலோனியசு (Appolonius) என்ற சிற்பி செதுக்கிய ஒரு குத்துச்சண்டை வீரனின் சிலையே அட்டைப்படத்தில் காணப்படுவதாகும். அக்காலத்தில் குத்துச்சண்டை வீரர்கள் கையுறை அணிந்திருந்ததை அச்சிலை தெரிவிக்கின்றது.

குத்துச்சண்டை

உடற்கல்வியில் ஒருபிரிவாக இன்று பல் வேறு நாடுகளிலுமுள்ள வாலிபர்கள் பயிற்சி பெறும் குத்துச்சண்டை (Boxing) தொன்று தொட்டு வளர்ந்துவந்திருக்கும் ஒரு கலையாகும். நாகரிகமற்ற காலத்தில் குத்துச்சண்டை ஒரு தற்காப்பு முறையாகக் கொள்ளப்பட்டு, நாகரிகம் மலர்ந்து மனிதர்கள் நாடு நகரங் கண்டு வாழ முற்பட்ட காலத்தில் மனிதனின் ஆற்றலையும் உடல் வலிவையும் வெளிப் படுத்தி நிற்கும் ஒரு கலையாக மாறியது.

உலகின் எந்தப்பகுதியிலிருந்து குத்துச் சண்டை முதன் முதல் தோன்றி மற்ற இடங் களுக்குப் பரவியது என்று திட்டவட்டமாக நாம் கூறமுடியாது. முதன் முதல் எங்கெங்கு மனிதன் தோன்றி, மனிதர்கள் பெருகினர் களோ அங்கெல்லாம் தற்காப்பு முறையாக குத்துச்சண்டை தோன்றியிருக்கலாம்.

குத்துச்சண்டையை ஒரு கேளிக்கை சாதன மாகப் பழங்காலச் சுமேரியர்கள், சுமார் ஐந்தா யிரம் ஆண்டுகளுக்கு முன்னர் போற்றி வளர்த் திருப்பதாக வரலாற்றுக் குறிப்புகள் மூலம் தெரியவருகின்றது.

பழங் கிரேக்க நாகரிகத்தில் குத்துச்சண்டை பற்றிய குறிப்புகள் பெருமளவிற்குக் கிடைத் திருக்கின்றன. வலிவுபெற்ற ஏதன்சு நகர வாலிபர்கள் பொறுக்கி யெடுக்கப்பட்டு குத் துச்சண்டைப் போட்டியில் ஈடுபடுத்தப்பட் டிருக்கின்றனர். போட்டியில் வீரர்கள், ஒருவர் க்கு மற்றவர் முதுகோடு ஒட்ட, இருவர் முகத்தை மற்றவர் பார்க்கும்படியாக உட்கார வைக்கப்படுவார்களாம். ஒரு குறிப்பிட்ட அறிவிப்பின்போது இரு வீரர்களும் ஒருவரை யொருவர் தத்தம் கைகளால் குத்திக்கொள்ள முற்படுவார்களாம். பின் குத்துச் சண்டை வீரர்கள் தங்கள் கைகளில் உரைகளை மாட்டிக் கொண்டு போரிடும் வழக்கம் ஏற்பட்டது. உரைகளில் உலோகத்தாலான சிறுசிறு முட்கள் பொருத்தப்பட்டிருந்ததால் குத்துச் சண்டையின் விளைவுகள் பயங்கரமாகத்தோன் றியது. வாய் கிழிய, கண்கள் துளைபட, மூக்கி லிருந்து குருதிகொட்ட மண்டை சிதற—இப் படி பல கோரக் காட்சிகள் ஏற்பட்டன. அனேகமாக போட்டியிடும் இருவருமே இறந்து விடுவார்கள். இதன் பிறகு கையுரைகளின் முட்கள் நீக்கப்பட்டு மெதுவானதாக ஆக்கப் பட்டாலும் குத்துச்சண்டையின் விளைவாக இறக்கும் வாலிபர்களின் எண்ணிக்கை குறைய வில்லை. ரோமானியர் கிரேக்கத்தை வென்று தம் ஆதிக்கத்தை நிலைநாட்டியபோது, குத் துச்சண்டை வீரர்களின் கையுரைகள் தோலி னால்தான் இருக்கவேண்டும் என்று ஏற்பட் டது, என்றாலும் போட்டியின் கொடூர விளைவு மறையவில்லை. இப்பொழுதுள்ள குத்துச் சண்டை போட்டிபோல் அப்போது கிடை யாது. அப்போது வீரர்கள் போட்டியில் இறங்கினால் ஒரு வீரன் வெற்றியடையும்வரை போட்டி நடைபெறும்; தோல்வியடையும் வீரன் எழமுடியா நிலையில் குற்றுயிரும் குலை யுயிருமாக வீழ்த்தப்படுவான்.

நம் தமிழ்நாட்டிலும் குத்துச்சண்டை வழக்கி லிருந்தது. பண்டைத் தமிழகத்தில் குத்துச் சண்டை யிருந்ததுபற்றிய சில குறிப்புகள் புறநானூற்றுப் பாடல்களில் காணப்படுகின் றன. ஆனால் குத்துச்சண்டையில் கோரக் காட்சிகள் நேரிடாதபடி நாளடைவில் குத்துச் சண்டையின் முறைகளை மாற்றிவிட்டனர். அதுவே இன்று நாம் அழைக்கும் மற்போர் (Wrestling) என்பதாகும். மற்போர் நம் நாட்டி லிருந்துதான் பிறநாடுகளுக்கு பரவியிருக்கி றது. மற்போர் குத்துச்சண்டையிலிருந்து பிரிந்த ஒரு கலையாகும். மற்போரில் போட்டி யிடும் வீரர்கள் ஒருவரை யொருவர் குத்திக் கொள்ளாமல், ஒருவரை யொருவர் தனது உடல் வலிவால் வீழ்த்தித் தரையில் முதுகு படும்படிச் செய்துவிட்டால் அதுவே வெற்றி யின் அறிகுறியாகும்.

ஐரோப்பிய நாடுகளில் வழக்கிலிருந்த குத் துச்சண்டை முறைகளில் பலகாலம் வரை எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. பல நாடு களில் வீரர்கள் கையுரை யில்லாமலே போரிட் டனர்.

இப்பொழுது குத்துச்சண்டை வீரர்கள் அணியும் தோலினாலான கையுரை 18-ம் நூற்

ருண்டில் சாக் பிராட்டன் (Jack Broughton—1705—89) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டதாகும். இவரே ஆங்கிலக் குத்துச்சண்டை முறைக்குத் தந்தையாகும். புதிய கையுறைகளினால் போட்டிகளில் கொட்டப்படும் குருதி பெருமளவிற்கு குறைந்தது.

ஆங்கிலக் குத்துச்சண்டை முறைக்கு அப்போது புகழ்பெற்ற ஆசிரியராக சான் சாக்சன் (John Jackson) என்பவர் விளங்கினர். அவர் குத்துச்சண்டையில் பல புதிய அறிவியல் முறைகளைப் புகுத்திக் குத்துச் சண்டையை யாவரும் கண்டு போற்றத்தக்க வகையில் மாற்றினர். அவருடைய மாணுக்கர்களில் லார்டு பைரன் (Lord Byron) என்ற கவிஞரும் ஒருவராவர்.

ஆனல் குத்துச்சண்டையில் கோரவிளைவுகள் நிகழாவண்ணம் பல விதிகளை ஏற்படுத்தி குத்துச்சண்டையை கேளிக்கைக்குரிய ஒரு நல்ல சாதனமாக ஆக்க, சென்ற நூற்றுண்டின் இறுதியில்தான முயற்சி யெடுக்கப்பட்டது. 1865-ல் இங்கிலாந்தில் குத்துச்சண்டைக்கு புதிய விதிகள் தயாரிக்கப்பட்டன. இதற்கு குவீன்சுபெரி விதிகள் (Queensberry Rules) என்று பெயர். இந்த விதிகளே கொஞ்சங் கொஞ்சமாக மாற்றப்பட்டு இன்று எல்லா நாடுகளிலும் குத்துச்சண்டையில் கடைப்பிடிக்கப்படுகிறது.

இப்பொழுது குத்துச்சண்டை ரவுண்டு (Round) என்று பல பிரிவுகளாக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ரவுண்டும் மூன்று நிமிட நேரம் நடைபெறும். வீரர்கள் குறிப்பிட்ட இடங்களில்தான் குத்தவேண்டும் இடம் தவறிக் குத்தினல், குத்தும் வீரன்பேரில் குறை கூறப்பட்டு வெற்றி எண்கள் குறைக்கப்படும். சண்டையின்போது ஒரு வீரன் கீழே விழுந்து விட்டால் போட்டியைக் கண்காணிக்கும் நடுவர் (Umpire) ஒன்று, இரண்டு, மூன்று......என்று பத்து வரை கூறிக்கொண்டே செல்வார். அதற்குள் விழுந்த வீரன் எழுந்திருக்கவேண்டும். இல்லையானல் அவன் தோல்வியுற்றவனுகக் கருதப்படுவான். குத்துகளுக்குத்தக்கபடி "மார்க்குகள்" தனித்தனியே அமர்ந்திருக்கும் நடுவர்களால் குறிக்கப்பட்டு, வெற்றி வீரன் யார் என்பதை போட்டி முடிவடைந்ததும் தெரிவிப்பர். வீரர்களின் எடை சமநிலையில் இருக்கும் வகையில் எடைக்குத் தகுந்தாற்போல் போட்டியில் பலவகையாகப் பிரிக்கப்பட்டு போட்டியிடும் வீரர்களின் எடையில் ஏற்றத்தாழ்வு அதிகமில்லாமல் செய்யப்பட்டிருக்கிறது.

இவ்விதமாகக் குத்துச்சண்டையின் விதிகள் வெகுவாக மாற்றப்பட்டு இன்று எல்லா நாடுகளிலும் கற்றுககொள்ளப்படும் உடற் கல்விக் கலையாக விளங்குகின்றது.

அறிவுப் புதிர்

கீழ்க்காணும் புதிர்கள் ஒவ்வொன்றிற்கும் அடியிலும் மூன்று விடைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதில் எது சரியானவிடை என்பதைக் குறித்துக்கொண்டு, 35-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் விடைகளோடு சரிபார்த்துக்கொள்ளவும்.

1. இரண்டாவது உலக மகாயுத்தத்தின் ஆரம்பநாள்.
   (அ) ஆகஸ்ட் 29, 1939
   (ஆ) செப்டம்பர்-1, 1939
   (இ) செப்டம்பர்-3, 1939

2. தொலைநோக்கி (டெலஸ்கோப்) யைக் கண்டுபிடித்தவர்.
   (அ) கலீலியோ
   (ஆ) ஹான்ஸ் லிப்பர்ஷெ
   (இ) ஐசக் நியூடன்

3. பூமி ஒருதடவைத் தன்னைத்தானே சுற்றிக்கொள்ள ஆகும் நேரம்.
   (அ) 23 மணி 56 நிமிடங்கள்
   (ஆ) 24 மணி
   (இ) 24 மணி $\frac{1}{4}$ நிமிடம்

4. அதிக எடையுள்ள உலோகம்
   (அ) தங்கம்
   (ஆ) இரிடியம்
   (இ) பிளாடினம்

5. உலகில் தாய்மொழியாக அதிகமக்களால் பேசப்படும் மொழி.
   (அ) சீனம்
   (ஆ) ஆங்கிலம்
   (இ) உருது

6. ஐரோப்பாவிற்கும் இந்தியாவிற்கும் கடல் மூலம் புதிய வழி கண்டுபிடித்த வாஸ்கோடகாமா இந்தியாவின் மேற்குக் கரையில் வந்திறங்கிய ஆண்டு
   (அ) 1494 (ஆ) 1498 (இ) 1526.

7. உலகில் மிக உயர்ந்த சிகரமான எவரெஸ்ட் இருக்குமிடம்.
   (அ) இந்தியா
   (ஆ) திபெத்து
   (இ) நேபாளம்

8. ஆஸ்திரேலியாவின் தலைநகரம்
   (அ) சிட்னி (ஆ) கான்பெர்ரா (இ) மெல்பர்ன்

9. முதன் முதல் தமிழில் நாவல் எழுதியவர்
   (அ) வேதநாயகம் பிள்ளை
   (ஆ) பி. சம்பந்தமுதலியார்
   (இ) ஆரணி குப்புசாமி முதலியார்.

651



(32)

கோதானம் கொடுப்பதன் பலன்களைப்பற்றி மகாவிட்டுணு கருடபகவானிடம் கூறுகிறார். "ஓ! பறவைகளுக்கரசே! வைத்ராணி நதியைக் கடக்க, ஒருவன் சகல சம்பிரதாயங்களுடன் கோதானம் செய்யக்கடவன்!

சிறுவயதில், வாலிபப்பருவத்தில், நல்லவயதில், முதுமைப் பருவத்தில் செய்த பாவங்கள்,

(இந்தப் பிறவியிலன்றி) முன்னைய பிறவிகளில் செய்த பாவங்கள்,

இரவில், பகலில், காலையில், மாலையில், எல்லா நேரங்களிலும்) செய்த பாவங்கள்,

செய்கையால், பேச்சால், எண்ணத்தால் நிகழ்ந்த பாவங்கள்,

இந்தப் பாவங்களெல்லாம், கன்றையுடைய, பால் தரக்கூடிய ஒரு சிகப்புப் பசுவை, வேதங்கள் படித்து, சம்பிரதாயங்களில் தவறாமல் இருக்கும் ஒரு பிராமணனுக்குத் தானம் செய்வதால் தீர்ந்துவிடுகின்றன. சேர்ந்திருக்கும் பாவங்களெல்லாம், கோதானம் செய்வதால் ஒரேயடியாக நீங்கிவிடுகின்றன."

இறந்தவன் உடலை விட்டு, ஆவி பிரிந்து செல்லுகிறபொழுது, அது வைத்ராணி என்ற நதியைக் கடக்கவேண்டியிருக்குமாம். புராண வர்ணனைப்படி, வைத்ராணிநதி ஆயிரம் மைல்கள் அகலமுடையதாய் பார்ப்பதற்குப் பயங்கரமாய் ஓடிக்கொண்டிருக்குமாம். யாராவது பாபம் செய்தவர்கள் வருகிறார்களென்றால், அந்த நதி அக்னி சுவாலையுடன், புகையும் வெப்பமும் கொப்பளிக்கக்கிளம்புமாம். பிரிந்த ஆவி, பூலோகத்தில் ஒரு பிராமணனுக்குக் கோதானம் செய்திருந்தால், அப்பொழுது அந்தப் பசு அங்கு வந்து, ஆவியைச் சுமந்து மறுகரையில் கொண்டுபோய்விடுமாம்.

பசுவைத் தானம் செய்வதென்றால், நல்ல பிராமணனைக் கூப்பிட்டு ஒரு கறவைப் பசுவைக் கொடுத்துவிட்டால் போதாது. கோதானத்தின் முழுப்பலனை அடையவேண்டுமென்றால், அதற்கான சம்பிரதாயங்களுடன் கோதானம் செய்யவேண்டும். அந்த சம்பிரதாயங்கள் என்ன என்பதைப்பற்றியும் மகாவிட்டுணு கருடபுராணத்தில் சொல்லுகிறார்.

"ஒரு கறுப்பு அல்லது சிவப்பான பசுவைப் பிடித்து நன்றாக அலங்கரிக்கவேண்டும், கொம்புகளில் தங்கப் பூணும், கால் குளம்புகளில் வெள்ளிப் பட்டையும் மாட்டவேண்டும், பால் கறக்க பெரிய வெண்கல பாத்திரம் வைக்க வேண்டும்.

கருப்புத் துணியால் மாட்டை மூடவேண்டும். கழுத்தில் ஒரு மணியும், முதுகின்மேல் வெண்கலத்தையும் வைக்கவேண்டும்.

வெண்கலப் பாத்திரத்தில் கடைந்தெடுத்த வெண்ணெய்யை அடைத்து, அதன்மேல் பொன்னாலான யமன் உருவத்தை வைத்து, எல்லாவற்றையும் பசுவின் முதுகின்மேல் வைத்துப் பூசை செய்யவேண்டும்.

பிராமணனை அழைத்து, அட்சதை, மலர்கள் இவைகளைத் தூவி அவனை வணங்கியபின் வேட்டித்துண்டுகள், பொன்னாபரணங்கள் முதலியவற்றைச் செலுத்தி, மாட்டின் வாலை ஒருகையால் பிடித்துக்கொண்டு பின்வரும் மந்திரங்களைச் சொல்லவேண்டும்.

அண்டங்களுக்கு முதலான தேவனே! அடைக்கலம் வேண்டியவர்களுக்குக் கருணை காட்டுபவரே! பிரபஞ்ச சாகரத்தில் உழன்று, துக்கமும் வருத்தமும் ஆகிய அலைகளால் மோதப்பட்டவர்களுக்கு நீர்தான் உதவுகிறீர்!

ஓ ! பிராமணோத்தமரே ! விஷ்ணுவின் அம்சமானவரே ! பூலோகத்தின் தேவரே ! என்னை (மோட்சத்திற்கு) உயர்த்துவீராக ! நான் இந்த தானத்தை உமக்குத் தருகிறேன் ! வைத்ராணிக்கு அஞ்சலி செய்கிறேன் !

யமபுரத்திற்குச் செல்லும் வழியில், நூறு யோசனை அகலமாயும், பார்ப்பதற்குப் பயங்கரமாகவும் இருக்கும் வைத்ராணி நதியைக் கடக்க, இந்தப் பசுவை நான் உங்களுக்குத் தானம் செய்கிறேன் ! வைத்ராணிக்கு அஞ்சலி செய்கிறேன் !

ஓ, பசுவே ! யமபுரத்து வழியைச் சுலபமாகக் கடக்க எனக்கு உதவிபுரிவாயாக !"

இவ்வாறு மந்திரங்களைச் சொல்லி, பசுவைச் சுற்றி வலம்வந்து, பிராமணனுக்கு எல்லாவற்றையும் தானம் செய்யவேண்டும்.

எவனொருவன் வைத்ராணிப் பசுவை முறைப்படித் தானம் செய்கிறானோ, அவன் யமதர்மனின்முன் நல்லவழியில் செல்கிறான்."

இந்தக் கோதானமுறை கருடனுக்கு மகா விட்டுணு சொல்லியதாகக் கூறப்படும் கருட புராணம் எட்டாவது சருக்கத்தில் எழுதப்பட்டிருக்கிறது. கோதானம் கொடுக்கவேண்டுமென்றால், மிக ஏழையாயிருப்பவனிடம் ஒரு பசுவை மாத்திரம் வாங்கிக்கொண்டு பிராமணர் திருப்தியடைந்துவிடுவார். கொஞ்சம் வசதியாயிருப்பவர்களிடம் கருடபுராண முறையை முழுவதும் சொல்ல ஆரம்பித்துவிடுவார். "யமன் உருவத்தை பொன்னால் செய் ! பசுவின் கொம்புக்குப் பொன்னால் பூண் போடு ! குளம்புக்கு வெள்ளிப் பட்டையை மாட்டு ! வஸ்திர தானமும் சுவர்ணதானமும் செய் ! கோதானம் என்றால், இப்படிச் செய்யவேண்டுமென்று மகாவிஷ்ணுவே சொல்லியிருக்கிறார்!" என்று ஒருவருடைய ஆயுள் பூராவுக்கும் வேண்டிய பொருளை ஒரு தானத்திலேயே வாங்க முயற்சிப்பார். கறவைப்பசு நூறு ரூபாய் என்றால், மற்ற தானங்கள் ஆயிரத்துக்கு வந்து நிற்கும்.

கோதானத்தைப் போலவே, பூதானமும் சிறந்ததாம். அதிலும் அரசர்கள் அவசியம் செய்யவேண்டும். வேதப் பிராமணர்களின் ஆலோசனைகளின்படி—ஆக்ஞைப்படி நடந்த அரசர்கள், ஏராளமான கிராமங்களைப் பிராமணர்களுக்குத் தானம் செய்தார்களல்லவா !—அத்தகைய தானங்களால் சதுர்வேதிமங்கலங்கள் நாட்டில் பலப்பல உண்டாயின—இந்த தானங்கள் செய்யவேண்டியதன் அவசியமும் கோதானத்திற்கு முன்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

"விரதங்கள், புண்ணிய யாத்திரைகள், வேறு தானங்கள் இவைகளால் ஒரு அரசன் செய்த பாவங்கள் தொலையாது, பூதானம் செய்வதால் மட்டுமே அரசபாவங்கள் தீரும் !

பயிர் நிறைந்த பூமியைப் பிராமணனுக்குத் தானம் தந்தால், அவனுக்கு இந்திரலோகப் பதவி கிடைக்கிறது."

(கருடபுராண சாரோத்ரம், 8-வது சருக்கம், 50, 51 சுலோகங்கள்.)

மகாவிட்டுணுவே இவ்வாறு முடிவாகச் சொல்லுகிறாரென்றால், யுத்தகளத்தில் பலரைக் கொல்லவேண்டிய அரசன்;—தன்பாவங்களைத் தீர்க்க, நிலங்களையல்ல, கிராமங்களையேத் தானம் செய்ய ஆரம்பித்தான்.

ஒரு அரசன் பூதானம் செய்யவேண்டியது, பாவங்களைத் தீர்க்க மட்டுமல்ல ; பூதானம் செய்யாவிட்டால் வரும் பாவங்களும் கருட புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

"அரசனாக வந்தவன் பிராமணர்களுக்குப் பூதானம் செய்யாவிட்டால், மறு பிறப்பில் பிச்சைக்காரனாகப் பிறந்து, தங்குவதற்குக் குடிசைகூட இல்லாமல் தவிப்பான்.

அகங்கார மிகுதியால், ஒரு அரசன் பூதானம் செய்யாதிருந்தால், ஆதிசேடன் பூமியைத் தாங்கிக்கொண்டிருக்கும் அவ்வளவு காலமும் நரகவாதனை அனுபவிப்பான்.

ஆதலால் ஒரு அரசன் பூதானம் செய்வானாக ! மற்றவர்களுக்கு கோதானம். பூதானத்திற்கு சமமானது என்று நான் சொல்லுகிறேன்."

இவ்வாறு அழுத்தந் திருத்தமாக பாற்கடல் பரந்தாமன் சொல்லியபின் அரசர்கள் பூதானம் செய்யாமலிருப்பார்களா ? மற்றவர்கள் பசுதானம் செய்ய மறப்பார்களா ?

புராணங்களில் கூறப்படுகிற "பாவமன்னிப்பு"கள் வேடிக்கையாயிருக்கின்றன. உண்மையாகவே, ஒரு பாவம், அதைத்தீர்க்கும் வழியென்றால், எல்லோருக்கும் பொதுவாக இருக்கவேண்டும். ஆனால் தானங்களின் நீதி அப்படியிருக்கவில்லை. ஏழை, பணக்காரன், ஆண்டி, அரசன் என்று பிரித்து அபராதம் விதிக்கிறது. தானங்களின் அளவு, பாவத்தைப் பொறுத்ததல்ல; கொடுப்பவரின் வளப்பத்தைப் பொறுத்தது, வாங்குகிற வேதப்

பிராமணரின் சாமர்த்தியத்தைப் பொறுத்தது. இல்லாவிட்டால், பாவங்களைத் தீர்க்க, இறந்ததும் யமவாதனையிலிருந்து மீள, அரசன் பூதானம்செய்யவேண்டும். நிலபுலங்கள் இல்லாத மற்றவர்கள் கோதானம் செய்தால் போதும் என்று வருமா? கோதானம் என்ருலும், ஏழையாயிருந்தால் ஒருவகையிலும், கொஞ்சம் பசையிருந்தால் மற்ருெருவகையிலும் பிராமணர் வசூல் செய்துவிடுவார்.

இறந்தவர்களுக்காகவும், பிதுர்லோகத்தில் இருக்கும் பிதுர்களையும் திருப்திபடுத்த செய்யப்படும் தானங்களில் சய்யாதானம் என்பதும் ஒன்று. இது இப்பொழுது வழக்கிலில்லை. ஆனாலும் புராணங்களில் மிகவிரிவாகக் கூறப் பட்டிருக்கிறது. தானம் வாங்க முனைந்த பேராசைக்காரர்கள், பாவங்களைத் தீர்க்க என்று சொல்லி எவ்வளவு வசதிகளைத் தானத்தின் பெயரால் அடைகிருர்கள் என்று இந்தத் தானத்தைக் கவனித்தால் தெரியும்.

இந்தத் தானத்தின் முறையும், மகிமையும் கருடபுராணத்தில் 13-வது சருக்கத்தில் கூறப் பட்டிருக்கிறது. சய்யாதானமென்ருல், வேறென்றுமில்லை, படுக்கை தானம் என்று பொருள். பிராமணனுக்குப் படுக்கையைத் தானம் செய்வது புராணத்தில் சொல்லியிருப்பதை அப்படியே கீழே தருகிருேம்.

"இந்திராதி தேவர்களெல்லாம் சய்யாதானத்தைப் பற்றி உயர்வாகச் சொல்லுகிருர்கள். ஆதலால், உயிரோடு இருக்கும்பொழுதோ அல்லது இறந்தவர்களுக்காகவோ, சய்யாதானம் (படுக்கை தானம்) செய்யவேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்தர மரத்தால் கட்டில் செய்யப்பட்டு, பார்ப்பதற்கு ரம்மியமாக, பலவகை வர்ண, சித்திர வேலைப்பாடுகளுடன், பட்டுத்துணியாலான மேல்விதானம் தொங்க, அதிலிருந்து தங்கத்தாலான பூக்களும், இலைகளும் மின்னவேண்டும்.

கட்டிலின் மெத்தையும், தலையணைகளும் பட்டு உரையால் மூடப்பட்டு, உள்ளே அன்னத்தின் மெல்லிய இறகு மயிர்களால் அடைக்கப்பட்டு, மிருதுவாகவும் அழகாகவும் இருக்க வேண்டும். படுக்கையின்மேல், மலர்களிலிருந்து எடுக்கப்பட்ட வாசனைத் தைலங்கள் தெளிக்கப்பட்டு, நல்ல வாசனை வீசவேண்டும். படுக்கை நன்ருகச் செய்யப்பட்டு, பெரியதாய், உல்லாசத்தைத் தருவதாய் இருக்க வேண்டும். தானம் கொடுக்கும்பொழுது, தரையில் கம்பளம் விரித்து, அதன்மீது கட்டிலை வைக்கவு...

கட்டிலைச் சுற்றி, ஒரு குடை, வெள்ளியாலான சரவிளக்கு,மாட்டு மயிரால் பின்னப்பட்ட விசிறி, அழகான ஆசனம், ஒரு பாத்திரம், தண்ணீர்க்குடம், பஞ்சவர்ணங்கள் கூடிய போர்வை, இவைகளை வரிசையாக வைக்க வேண்டும்.

படுக்கையில் திருமால், லட்சுமி இவர்களின் பொன் விக்கிரகங்களை வைத்து, அவைகளுக்கு ஆபரணங்கள் பூட்டி, பட்டு பீதாம்பரங்களை அணிந்து, எழுந்தருளச் செய்யவேண்டும்.

பிறகு ஒரு பிராமணனையும் அவனது மனைவியையும் அழைத்து, உபசரித்து, திருமால் லட்சுமி உருவங்களுக்கு எதிராக அமரச்செய்யவும். பிராமணனுடைய மனைவி மலர்களாலும் வாசனைத் திரவியங்களாலும் காதணி, மோதிரம், பொன்னாபரணங்கள் முதலியவைகளாலும் அலங்கரிக்கப்படவேண்டும்.

தானங்கொடுப்பவர் கட்டிலின் முன் அமர்ந்து, குங்குமம், பூ இவைகளை அர்ப்பணித்து, அரியையும் லட்சுமிதேவியையும் தொழவேண்டும், அத்துடன் லோகநாயகர்கள், பூலோக தேவதைகள், விநாயகர் முதலியவர்களையும் வணங்கவேண்டும்.

பின் வடக்கு நோக்கி நின்று, பிராமணனுக்கு எதிராக, மலர்களைக் கையில் வைத்து, கீழ்க்கண்ட மந்திரத்தைச் சொல்லவேண்டும்.

'ஓ! கிருஷ்ணா! பாற்கடல், உமது, படுக்கை ஆனதுபோல, இனிவரும் எனது பிறவிகளில் இந்தப் படுக்கை காலியாகாமல் உதவுவதாக!'

இந்த மந்திரத்தை உச்சரித்ததும், அவன் தன் கையிலிருக்கிற மலர்களை பிராமணனுக்கு முன்னும் விஷ்ணு உருவத்துக்கு முன்னும் வைத்து, அலங்கரிக்கப்பட்ட கட்டிலையும், படுக்கையையும் தானமாக ஏற்றுக்கொள்ளும்படிச் செய்யவேண்டும்.

தானத்தை ஏற்றுக்கொள்பவன், விரதங்களைக் கடைப்பிடிப்பவனாகவும், வேதாசிரியனாகவும், பிராமணர்களைப் பற்றிச் சொல்பவனாகவும் இருக்கவேண்டும். தானங் கொடுப்பவன் பிராமணன்முன் பணிந்து "ஓ! பிராமணோத்தமரே! இவைகளை ஏற்றுக்கொள்ளுங்கள்! இதைப்போன்ற தானத்தைக் கொடுப்பவர்கள் அரிது!" என்று சொல்லி வேண்டிக் கொள்ளவேண்டும்.

பின்பு அவன் கட்டிலைச் சுற்றி மும்முறை

வலம்வந்து, தெண்டனிட்டு, தானத்தைத் தரவேண்டும்.

தானங்கொடுப்பவன் நல்ல செல்வமுடையவனுக இருந்தால் ஒரு அழகான வீடு உண்டாக்கி, அதில் சகல வசதிகளையும் பொருந்தச் செய்து, பிராமணனுக்குத் தானம் தரவேண்டும். அப்படிச் செய்தால், தானம் தரப்பட்ட அழகிய கட்டிலில் பிராமணன் இன்பமாகத் தூங்கமுடியும்.

நல்ல பிராமணனைத் தேர்ந்தெடுத்து சய்யா தானம் செய்தால், அதன் பலனை ஒருவன் அடையலாம். தந்தையும், தானத்தைத் தருகிற மகன், இருவரும் இங்கு மட்டுமல்லாமல் மேலுலகத்திலும் சுகமடைகிறார்கள்.

சய்யாதானம் செய்ததன் பலனுக, இந்திர லோகத்திலும், யமனுடைய பட்டணத்திலும், அவன் பெருமையுடன் வரவேற்கப்படுவான்.

துன்பங்கள் எதுவும் தெரியாமல், மிக உயர்ந்த மஞ்சங்களில் அமர்ந்து, தெய்வ மாதர்கள் பலர் பணிவிடைசெய்து மகிழ்விக்க, யுகாதி காலம்வரை அவன் வாழ்ந்திருப்பான்.

எல்லா புண்ணிய தினங்களிலும் எல்லா புண்ணிய தீர்த்த இடங்களிலும் கிடைக்கும் புண்ணியத்தைவிட அதிகமான அளவு புண்ணியம் ஒரு சய்யாதானம் (படுக்கைதானம்) செய்தால் கிடைக்கிறது.

படுக்கை தானத்தைச் செய்ததும், மகன் பததானங்களையும் செய்யவேண்டும். அவை என்னவென்று விளக்கமாகச் சொல்லுகிறேன் கேட்பாயாக!

குடை, செருப்பு, வேட்டி, மோதிரம், தண்ணீர்குடம், ஆசனம், பஞ்சபாத்திரங்கள்—இவை ஏழுவகைப் பததானங்களாலும். இவையுடன், ஒரு கைத்தடி, செப்புப்பாத்திரம், சமைக்காத அரிசி, உணவுப்பொருள்கள் விலையுள்ள சாமான்கள், பூணூல் முதலியவைகளையும் சேர்த்தால், பதின்மூன்று பதங்கள் ஆகும்.

இறந்ததற்குப் பின், பன்னிரண்டாவது நாளன்று பதின்மூன்று பிராமணர்களை அழைத்து பதின்மூன்று பததானங்களைச் செய்யவேண்டும்.

பததானங்கள் கொடுப்பதால், இறந்தவன் யமனுக்குமுன் நல்ல நிலைமையடைந்து, மேலுலகம் செல்கிருன்.

உலகை விட்டுப் பிரிந்த ஆத்மா முதலில் கடுமையான வெய்யலில் அகப்பட்டு அவதிப்படும். அப்பொழுது தானம் தரப்பட்ட குடை நிழலைத் தந்து காப்பாற்றும்.

ஆத்மா போகும் வழியில் முள்கள் நெருங்கியிருக்கும். செருப்பு தானம் செய்தால் குதிரை மீது அமர்ந்து அந்த இடத்தைக் கடந்துவிடலாம்.

ஆத்மா செல்லும் வழியில் யமபடர்கள் பயங்கரப் பார்வையுடன் காத்திருப்பார்கள். மோதிரதானம் செய்தவனைப் பார்த்ததும் அவர்கள் விலகிவிடுகிருர்கள்.

வழியில் காற்றும், தண்ணீரும் இல்லாமல் அதிக வெய்யலில் செல்லும்பொழுது, தண்ணீர்க்குடம் தானம் செய்ததால், குடிப்பதற்குத் தண்ணீர் கிடைத்துவிடும்.

எவனொருவன், இறந்தவர்களுக்கான சிரார்த்தத்தில் செப்புக்குடத்தைத் தானம் செய்கிருனே, அவன் ஆயிரக்கணக்கான கிணறுகளை வெட்டித் தருமஞ் செய்ததன் பலனை அடைகிருன்.

பிராமணனுக்குப் படுக்கை, பாத்திரங்கள் வசதிகளைத் தானம் செய்வதால், மேலுலகத்தில் வசதிகள் மிக்க வாழ்வை அவன் அனுபவிக்கிருன்.''

இவையனைத்தும், கருடபுராணத்தில் 8-வது சருக்கத்தில் 59 முதல் 93-வது சுலோகங்கள் வரை இருப்பதின் மொழிபெயர்ப்பாகும். இறந்தவர்களுக்காகவும், பிதுர்க்களுக்காகவும் செய்யப்படவேண்டிய சிரார்த்தங்களையும், தானங்களையும் பற்றி, மகாவிட்டுணு கருடனுக்குச் சொல்ல, கருடன் சூதமாமுனிவருக்குச் சொல்ல, சூதமாமுனிவர் நைமிசாரண்ய சௌனகாதி முனிவர்களுக்குச் சொல்ல, அது கருடபுராணமாக, அதை அண்ணங்காச்சாரியாரோ, ஆலமரத்து அப்பு சாஸ்திரிகளோ நமக்குச் சொல்ல—கடைசியாகப் பலன் தானங்கள் தரப்படுவது—அதை அவர்கள் வாங்கி அனுபவிப்பது.

'மன்றம்' சந்தா விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7—8—0
ஆறு திங்கள் ,,	3—0—0	
தனி இதழ் ,,	0—4—0	0—5—0

வினாவும் விளக்கமும்

வினா : தமிழ்நாட்டின் பெருமையை வெளிநாட்டவரும் உணர்ந்து வியக்கும்படியாகத் தமிழர் கலை, நாகரிகம், பண்பாடு இவற்றிற்குச் சிறந்த ஓர் அளவு கருவியாக இருக்கும் இலக்கியம், சிற்பம். கோயில்கள் அனைத்தையும் அழிக்கவேண்டும் என்று தாங்கள் கருதுவதை அறிஞர் உலகம் ஒப்புக்கொள்ளுகிறதா? அப்படி ஒப்புக்கொள்ளும் அறிஞர்கள் யார் யார்? எந்நாட்டவர்?

விளக்கம் : தமிழ்நாட்டு இலக்கியம், சிற்பம், கோயில்கள் ஆகிய அனைத்தையும் 'அடியோடு' அழிக்கவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தார் கூறுகிறார்கள் என்று அருள்நெறித்திருக்கூட்டத்தார் கருதுகிறார்கள் என்றால், அதுபற்றிய அவர்களின் அறியாமையை நினைந்து நாம் எள்ளி நகையாடவேண்டியவர்களாகத்தான் இருக்கிறோம்.

தமிழரின் கலை—நாகரிகம்—பண்பாடு ஆகியவற்றைச் சிறப்பாகவும், செழிப்பாகவும், சீரியனவாகவும் வளர்க்க திராவிட முன்னேற்றக் கழகம் பாடுபட்டுவருகிறதேயல்லாமல், அவற்றை 'அடியோடு' அழிக்கவோ, பாழ்படுத்தவோ முனையவில்லை. உண்மையைக் கூறவேண்டுமானால், வைதீக மனப்பான்மையினர்தான் அவைகளைப் பாழ்படுத்திவருகின்றனர்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்ற தெளிவுரைக்கேற்ப, காலத்திற்கேற்ற கருத்துக்கு வேண்டப்படாத பழைமைகளை விலக்குதலும், வேண்டப்படும் புதுமைகளைப் புகுத்துதலும் ஆன சீரிய பணியில்தான் திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபட்டுவருகிறது. ஆனால் வேண்டப்படாத பழைமைகளைக் கட்டிக்காத்தலும், வேண்டப்படும் புதுமைகளை ஒதுக்கித்தள்ளுதலும் ஆன செயல்களில் பெரும்பாலும் வைதீக உள்ளங்கொண்டோர்தான் விடாப்பிடியாக இருந்துவருகின்றனர்.

தமிழர்களால் தொன்றுதொட்டு இன்றுவரை இயற்றப்பட்ட இலக்கியங்கள்—சிற்பங்கள்—கோவில்கள் ஆகிய எல்லாவற்றையும் அப்படியே முழுக்க முழுக்க தி. மு. கழகத்தார் ஏற்றுக்கொள்ளுகிறார்களா? என்றால் "இல்லை!" என்றுதான் அழுத்தந் திருத்தமாக விடையிறுக்கிறோம்.

தமிழர்களின் இலக்கியங்கள்—சிற்பங்கள்—கோவில்கள் ஆகியவற்றில் ஆபாசமான—அருவருக்கத்தக்க—பிற்போக்கான—காலத்துக்கு ஒத்துவராத—மூடநம்பிக்கை நிறைந்த—குருட்டுப் பழக்கவழக்கம் செறிந்த—எதற்கும் பயன்படாத பகுதிகளை மட்டுமே அழிக்கவோ அல்லது மாற்றியமைக்கவோ அல்லது ஒதுக்கிவைக்கவோ முற்படுகிறோம். எவை எந்த இடத்தில், எந்த நேரத்தில், எதற்கு, எந்த அளவுக்குப் பயன்படுமோ அவற்றை அந்த இடத்தில், அந்த நேரத்தில், அதற்கு, அந்த அளவுக்கு மட்டுமே பயன்படுத்திக்கொள்ளும் நோக்கத்தைத்தான் நாம் கொண்டிருக்கிறோம்.

தமிழரின் கலை—நாகரிகம்—பண்பாடு ஆகியவற்றில் வெளிநாட்டவர் கண்டு வியக்கக்கூடிய பகுதிகள் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றை நாம் மறுத்துக் கூறவில்லை. அவர்கள் எந்த அளவுக்கு உணர்ந்து வியந்து கூறுகிறார்களோ அந்த அளவுக்கு நாமும் உணர்ந்து வியந்து கூறவே செய்கிறோம். கண்ணை மூடிக்கொண்டு பக்தியின் காரணமாக அவ்வளவையும் அப்படியே நம்பி வணங்கும் பண்பு அவ்வெளிநாட்டாரிடத்தில் இல்லை என்பதை அருள்நெறித்திருக்கூட்டத்தார் உணரவேண்டும். அத்தகைய பண்பு எம்மிடத்திலும் இல்லை என்றாலும், அதுபோலவே ஏற்றுக்கொள்கிற தன்மை அருள்நெறித்திருக்கூட்டத்தாரிடம் இருக்கவேண்டும்! இருக்கிறதா? இல்லையே!

இலக்கியங்களிலுள்ள அணியழகு—உவமையழகு—சொற்செறிவு—பொருளாழம் ஆகிய நயங்களை நாம் என்றும் கண்டு மகிழவே காத்திருக்கிறோம். ஆனால் மூடநம்பிக்கை—குருட்

டுப்பழக்கவழக்கம்—அறியாமை— அருவருப்பு ஆபாசம் போன்ற பலவும் நிறைந்த கருத்துக்களையும், இலக்கியங்களையும் நாம் மறுக்கவும்—வெறுக்கவும்—அழிக்கவும்—மாற்றவும்—ஒதுக்கவும்—சலிக்கவும்—கொழிக்கவும் செய்கிறோம். அப்படி அவை எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ள நாம் ஒருப்படுவதில்லை.

சிற்பங்களிலுள்ள கலையழகை நாம் போற்றவே செய்கிறோம். சீரிய கருத்தமைந்த சிற்பங்களாக இருந்தால் அவற்றை மிகமிகப் போற்றவே செய்கிறோம். "சிற்பங்களை வழிபாடுசெய்து வணங்கு!" என்று கூறினால் அதனை ஏற்க மறுக்கிறோம். கடவுட்சிலைகள் எல்லாம் உண்மைக் கடவுளரின் உருவங்கள் என்றால், அதனை ஒப்புக்கொள்ள மறுக்கிறோம். "யானைத்தலை—குதிரைத்தலை—மாட்டுத்தலை—கோழித்தலை—பன்றித்தலை—பாம்புடல்—மீனுடல்—ஆமையுடல் — மாட்டுடல் உருவங்களையும், இருளன் — காட்டேறி — பிடாரி—காளி போன்ற கடவுளரின் உருவங்களையும் அழகான உருவங்கள் என்று போற்று!" என்று கூறினால் அதனை ஏற்க மறுக்கிறோம். அறுபத்திநான்கு காமலீலைகளை உணர்த்தும் சிற்பங்கள் கோவில்களிலும்—மண்டபங்களிலும்-தேர்களிலும் இருக்கவேண்டாம், வேண்டுமானால் மக்களின் படுக்கையறைகளில் இருக்கட்டும் என்று சொல்கிறோம். பண்டைக்கால குருட்டு நம்பிக்கைக்கு ஏற்ப வளர்ந்த அழகான கடவுட்சிலைகள் இருக்கின்றன என்றால், அவை மூடத்தனமாக வணங்கப்படும் பொருள்களாக இருக்கவேண்டாம், பார்த்து மகிழ்வதற்குரிய கண்காட்சிப் பொருள்களாக இருக்கட்டும் என்கிறோம். பயன்படுத்தக்கூடிய சிற்பங்களைப் பயன்படுத்தக்கூடிய முறையில் பயன்படுத்தலாம் என்றுதான் சொல்லுகிறோம்.

பண்டைத் தமிழர் கட்டிய கோவில்களையெல்லாம் நாம் இடித்துத் தள்ளி அழிக்கச் சொல்லவில்லை. அது 'கடவுள்' உறையும் இடம் என்று கருதப்படாமல், கலைபயில் கூடமாகவும் — தொழில்பயில் இடமாகவும் — பொழுதுபோக்கு இடமாகவும் — கண்காட்சி சாலையாகவும்—விளையாட்டயரும் களமாகவும் பயன்படுத்தப்படவேண்டும் என்றுதான் சொல்லுகிறோம்.

நமது கருத்தை அறிஞர் உலகம் ஒப்புக்கொள்கிறதா? என்று அருள் நெறித் திருக்கூட்டத்தினர் வினவுகின்றனர். நம்மிடம் நேரிடையாக வரும் எந்த அறிஞர் உலகையும் நம்முடைய கருத்தை ஒப்புக்கொள்ளும்படி செய்யும் உறுதிப்பாடு நமக்கு உண்டு.

எல்லாநாட்டு அறிஞர் கூட்டமும் நம்முடைய கருத்தை ஏற்றுக்கொண்டே தீரும். ஒருசிலர் தம் நம்பிக்கைக்கு ஏற்ப ஏற்றுக்கொள்ளாமல் இருக்கக்கூடும் என்றாலும், நம்முடைய கருத்தை மறுத்து எதிர் கருத்து வைக்கும் ஆற்றல் எவரிடமும் இல்லை என்பது மட்டும் உறுதி.

தமிழரின் இலக்கியம் — சிற்பம்—கோவில்கள் 'அனைத்தையும் அடியோடு' அழிக்க முற்படுபவர்கள் அல்லர் நாம்; அவற்றில் பகுத்தறிவுக்கு ஒட்டிவராத தேவையற்றவைகளை ஒதுக்கித்தள்ளுகிறோம்!

வினா : தாம் காங்கிரசுக் கட்சியில் இணைந்திருந்ததால் தான் தமக்கு அமைச்சர் பதவி கிட்டியதென்றும் தாம் திராவிடர் இயக்கத்தில் பங்குகொண்டிருந்திருந்தால் தமக்கு அப்பதவி கிட்டாது என்றும் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் கூறுகிறார்களே அது சரிதானா?

விளக்கம் : தோழர் சி. சுப்பிரமணியம் அவர்கள் எவ்வளவு மட்டமான நிலைக்கு இறங்கிச் சென்று, எவ்வளவு மட்டமான வாதத்தை வைக்கக்கூடியவர் என்பதற்கு இந்தக் கூற்றே பொருத்தமான போதுமான எடுத்துக்காட்டாகும்.

இந்து மதத்தில் சேர்ந்திருந்தால் தாம் ஒரு போப்பாண்டவராக வந்திருக்கமுடியுமா என்று ரோமாபுரி போப் கேட்டால், முஸ்லிம் மதத்தில் சேர்ந்திருந்தால் தாம் ஒரு பண்டாரசன்னதி ஆகமுடியுமா என்று தருமபுரம் பண்டாரசன்னதி கேட்டால், அவற்றில் எவ்வளவு அறியாமை பொதிந்துகிடக்குமோ அவ்வளவு அறியாமை தோழர் சுப்பிரமணியம் அவர்கள் கூற்றிலும் பொதிந்து கிடக்கிறது.

காங்கிரசுக் கட்சியின் சார்பில், அமைச்சர் பதவி ஏற்கும் வாய்ப்பை, 'எப்படியோ' பெற்றுவிட்ட தோழர் சுப்பிரமணியம், பிற கட்சிகளில் இருந்திருந்தால் அத்தகைய வாய்ப்பினைப் பெறுவார் என்று எவராலும் உறுதியாகச் சொல்லமுடியாதுதான்! அவரது அறிவு—

657

ஆற்றல்—பண்பினைப் பார்க்கும்போது, காங்கிரசைத் தவிர வேறு எந்தக்கட்சியும் அவரை அமைச்சராக்க முற்படாது என்று வேண்டுமானாலுங்கூட உறுதியாகச் சொல்லலாம்!

காங்கிரசிலில்லாமல் திராவிடர் இயக்கத்திலிருந்திருந்தால், தோழர் சுப்பிரமணியம் அவர்களுக்கு அமைச்சர் பதவி கிட்டாது! சரி! அதனால் என்ன? இந்த உண்மையைக் கூறி, எதனை உணரும்படியாகப் பொதுமக்களைத் தூண்டுகிறார் தோழர் சுப்பிரமணியம்? என்று தெரியவில்லை! தம்மைப்போல் காங்கிரசில் சேருகிற எல்லோர்க்கும் அமைச்சர் பதவி கிடைக்கும் என்கிறாரா? அல்லது இனி உலகம் சென்று முடியுங்காலம் வரையில் காங்கிரசு ஒன்றிடத்தில் மட்டுந்தான் அமைச்சர் பதவி கிட்டும், திராவிட இயக்கம் போன்ற வேறு எந்தக்கட்சியிடத்தும் அமைச்சர் பதவி கிட்டவே கிட்டாது என்கிறாரா? அல்லது பொதுமக்கள், தாம் அமைச்சர் பதவி ஏற்பது ஒன்றைத்தான் ஆவலோடு எதிர்பார்த்திருந்தார்கள், அந்த ஆவல் காங்கிரசின் மூலமாகத்தான் நிறைவேற முடிந்தது என்கிறாரா? எதற்காக அதனைக் கூறுகிறார் என்பதை அவர் திட்டவட்டமாக விளக்கிக்கூறவில்லை!

தமக்கு அமைச்சர் பதவி கிடைக்கவேண்டும் என்பது அவரது வாழ்க்கையின் குறிக்கோளாக அவர் கொண்டிருக்கக்கூடும்! அந்தக் குறிக்கோள் காங்கிரசின் மூலமாக அவருக்கு நிறைவேறியிருக்கிறது! அவரைப் பொறுத்தவரையில் அது சரி! அவர் அமைச்சராக ஆகவேண்டும் என்பது எப்படி நாட்டு மக்கள் எல்லோருடைய குறிக்கோளாக இருக்க முடியும்? தமக்கு அமைச்சர் பதவி கிடைத்ததுபோல் காங்கிரசில் சேரும் எல்லோர்க்கும் அமைச்சர் பதவி கிடைக்கும் என்று தோழர் சுப்பிரமணியம் அவர்களாலேயே வாக்குறுதி அளிக்கமுடியாதே! தமக்கு அமைச்சர் பதவி கிடைத்துவிட்டதால், அதுவே போதுமானது என்று கருதிக்கொண்டு எல்லோரையும் காங்கிரசில் சேரவும், காங்கிரசை ஆதரிக்கவும் சொல்லுகிறாரா? தோழர் சி. சுப்பிரமணியம் அவர்கள் அமைச்சர் பதவி ஏற்றால், நாட்டின் அல்லல்கள் அனைத்தும் ஒழிந்துவிடும் என்று எண்ணி நீண்டநாட்களாக நாட்டுமக்கள் 'தவம்' ஒன்றும் கிடந்ததாகவும் தெரியவில்லையே!

அமைச்சர் பதவி என்பது அகில உலகத்திலும் சரி, இந்தியத் துணைக்கண்டத்திலும் சரி காங்கிரசு மட்டுமே கண்டுபிடித்து தனக்குத் தானே வைத்திருக்கும் பதவி அல்லவே! சென்னை மாநில அமைச்சர் பதவிகளை நீதிக்கட்சி பதினேழு ஆண்டுகாலம் வைத்திருந்து ஆண்டு அனுபவித்த பிறகுதானே, காங்கிரசு ஆளத்தொடங்கிற்று? காங்கிரசில் சேராத நீதிக்கட்சியினரும் அமைச்சர் பதவிகளை ஆண்டு அனுபவித்திருக்கிறார்களே! காங்கிரசுக்கு எதிரியாக இருந்த, காங்கிரசில் சேராத தோழர் இராமசாமி (படையாச்சி) போன்றோரே காங்கிரசு ஆட்சியில் அமைச்சராக முடிகிறதே! எந்த உயர்பெருஞ்சிறப்பைக் கருதித் தோழர் சுப்பிரமணியம் அவர்கள் தாமடைந்த அமைச்சர் பதவியின் 'மகிமை'யைப் பற்றிப் பேசுகிறாரோ, தெரியவில்லை!

தோழர் பி. டி. இராசன் அவர்கள் தாம் காங்கிரசில் சேராமல் நீதிக்கட்சியில் இருந்ததால்தான் தமக்கு அமைச்சர் பதவி கிடைத்தது என்று கூறுவாரேயானால், அவரது கட்சி—கொள்கை—நோக்கம் ஆகியவை அப்படியே ஏற்றுக்கொள்ளப்படவேண்டியவை தாம் என்ற முடிவுக்கு வரத் தோழர் சி. சுப்பிரமணியம் அவர்கள் தயார்தானா? தோழர் சி. சுப்பிரமணியம் அவர்களுக்கு அமைச்சர் பதவி கிடைப்பதன் காரணமாகக் காங்கிரசைச் சிறந்த இயக்கமாகக் கருதவேண்டுமென்றால், தோழர்கள் பி. டி. இராசன், முத்தையா (முதலியார்), முத்தையா (செட்டியார்), முனிசாமி (நாயுடு), குமாரசாமி (ரெட்டியார்), டாக்டர் சுப்பராயன் ஆகியோர்க்கு அமைச்சர் பதவிகள் கிடைத்ததன் காரணமாக நீதிக்கட்சியைச் சிறந்ததொரு இயக்கமாகக் கருதலாமா?

தம்முடைய வளர்ச்சியை எடைபோட்டுப் பார்த்து, அதனையே நாட்டின் வளர்ச்சியைக் குறிக்கும் எடையாகக் கொள்ளவேண்டும் என்று தோழர் சி. சுப்பிரமணியம் எதிர்பார்ப்பது கேலிக்குரியதாக இருக்கிறது!

உண்மையைக் கூறவேண்டுமானால், திராவிட இயக்கம் இல்லாவிட்டால், தோழர்கள் காமராசர், சுப்பிரமணியம் போன்ற பார்ப்பனரல்லாதார் அவ்வளவு எளிதாக அமைச்சர்களாக ஆகியிருக்க முடியாது. நீதிக்கட்சியும், அதன்வழிவந்த திராவிடக்கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவையும் வகுத்து வைத்த வழியாகத்தான் தோழர் சுப்பிரமணியம்போன்றோர் அமைச்சர் ஆகமுடிந்தது என்னலாம். இதனைப் பதவி மயக்கத்தின் காரணமாகத் தோழர் சுப்பிரமணியம் அவர்கள் உணராவிட்டாலும், வரலாறு உணர்த்திக் கொண்டேயிருக்கும்!



" கன்னற் பொருள்தரும் தமிழே
நீயோர் பூக்காடு நானோர் தும்பி "

திருச்சி விசுவநாதம்

[ஆசிரியர் : மா. சு. சம்பந்தன். பக்கம் - 148. விலை : ரூ. 1—4—0. கிடைக்குமிடம் : பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை–1.

தமிழ்—தமிழன்—தமிழகம் ஆகிய உணர்ச்சிகளிலே திளைத்து, அவைகளின் எழுச்சிக்காகவும் ஏற்றத்துக்காகவும் அரும்பாடுபட்டுவரும் செந்தமிழ்ச் செல்வர் திருச்சி கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்கிக்கூறிடும் நூல் இது. பொதுவாழ்க்கையில் நாணயமாகவும், நேர்மையாகவும், முறையாகவும் கடமைகளை வரையறுத்துக்கொண்டு வாழ்ந்துவரும் திருச்சி விசுவநாதம் அவர்களின் வாழ்க்கையில் பொதிந்துள்ள கருத்துக்கள், பொதுவாழ்வில் இறங்கத் துடித்துக்கொண்டிருக்கும் இளைஞர்களுக்கு நல்ல ஊக்கம் அளிப்பனவாக இருக்கும். நூலாசிரியர் தோழர் சம்பந்தன் அவர்கள் மிக்க உன்னிப்போடு வாழ்க்கைக் குறிப்புகளைத் திரட்டி அழகிய—இனிய—எளிய நடையில் நூலை இயற்றியுள்ளார். அட்டை தோழர் விசுவநாதம் அவர்களின் நிழற்படத்தைத் தாங்கிக்கொண்டு இரு வண்ணத்தில் இலங்குகின்றது.

❋

பாரதியார் கவிதைகள்

[ஆசிரியர் : பெருங்கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் பக்கம் : 634. விலை : ரூ. 5—0—0. கிடைக்குமிடம் : முரசொலிப் பதிப்பகம் 131, பிராட்வே, சென்னை-1]

இற்றைக்கால முக்கிய மக்கள் கவிஞர்களில் முன்னோடியாக வைத்து எண்ணப்படும் பெருங்கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் அவர்களின் கவிதைகளை ஒன்றாகத் திரட்டிக் காட்டும் நூல் இது. நூல், நல்ல தாளில், அழகான முறையில் எடுப்பாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. மூவண்ணத்தால் ஆன பாரதியாரின் படம் அட்டையை அழகுபடுத்துகின்றது. குறைந்த விலையில், அழகான முறையில் இந்நூலை வெளிக்கொணர்ந்த முரசொலிப் பதிப்பக உரிமையாளர் தோழர் நா. கிருட்டினன் அவர்களின் முயற்சி பாராட்டுதற்குரியது.

❋

எரிக்கப்பட்டாள்

[ஆசிரியர் : சத்தியவாணி முத்து. பக்கம் : 88. விலை : ரூ. 1—0—0. கிடைக்குமிடம் : மதிமன்றம், 38, பிடாரியார்கோவில் தெரு, சென்னை-1.]

இந்நூலில் பிரெஞ்சு நாட்டு வீரப்பெண்மணி சோன்-ஆப்-ஆர்க்கின் வீர வரலாறு இனிது எடுத்தியம்பப்படுகிறது. சோர்வுற்ற பெண்கள் இந்நூலை ஒரிருமுறை படிப்பார்களாயின் அவர்களை அறியாமலேயே அவர்கள் வீர உணர்ச்சி பெறுவர் என்பது திண்ணம். சோன்-ஆப்-ஆர்க்கின் வாழ்க்கையில் காணப்படும் வீரம் நிறைந்த கட்டங்கள், விறுவிறுப்பான நடையில், உணர்ச்சி ததும்ப எழுதப்பட்டிருக்கின்றன. அட்டை சோன்-ஆப்-ஆர்க்கின் படத்தோடு மூவண்ணத்தில் திகழ்கிறது.

அறிவுப்புதிர் - விளக்கம்

1. சரியான விடை (ஆ)

போலந்திலுள்ள டான்சிக் என்ற பகுதியை ஜெர்மனியோடு சேர்க்க முயற்சித்த இட்லர், 1939-ஆம் ஆண்டு ஆகஸ்ட்டுத் திங்கள் 29-ம் நாள் போலந்தோடு பேச்சுவார்த்தைகள் நடத்த அழைப்புவிடுத்தான். போலந்தின் சார்பாக தூதுவர் எவரும் வராதுபோகவே, செப்டம்பர் முதல் நாள் ஜெர்மனி போலந்தின் மேல் படையெடுத்து டான்சிக்கைக் கைப்பற்றியது. இதுவே இரண்டாவது உலக மகா யுத்தத்தின ஆரம்பமாகும். செப்டம்பர் மூன்றும் நாள் பிரிட்டனும் பிரான்சும் ஜெர்மனிக்கு எதிராகப் போரில் இறங்குவதாக அறிவித்தன.

2. சரியான விடை (ஆ)

தொலைநோக்கி என்றவுடன் கலிலியோ என்ற பெயர்தான் எல்லோருடைய நினைவிற்கும் வரும். ஆனால், ஹாலந்து நாட்டைச் சேர்ந்த ஹான்ஸ் லிப்பர்ஷெ (Hans Lippershey) என்பவர்தான் முதன் முதலில், 1608-ம ஆண்டில் தொலைநோக்கியைக் கண்டுபிடித்தார். அதன் அமைப்பை அறிந்த கலிலியோ அதைவிடச் சிறந்தமுறையில் ஒரு தொலைநோக்கியைச் செய்து டெலஸ்கோப் என்ற பெயரையும் கொடுத்தார்.

3. சரியான விடை (ஆ)

ஒரு நாளைக்கு 24 மணிநேரம் என்றபடி நமது கடிகாரங்கள் ஓடிக்கொண்டிருந்தாலும், பூமி ஒருதரம் தன்னைத்தானே சுற்றிக்கொள்ள உண்மையில் 23 மணி 56 நிமிடங்கள்தான் ஆகின்றது. நம்முடைய வசதிக்காகவே ஒரு முழு எண்ணாக, 4 நிமிடங்கள் அதிகமாகக் கொண்டு 24 மணியாக ஒரு நாளைக் கணக்கிடுகிறோம்.

4. சரியான விடை (ஆ)

ஒரே கன அளவுள்ள நீரின் எடையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அதே கன அளவுள்ள தங்கம் 19·32 பங்கு எடையும், பிளாடினம் 21·45 பங்கு எடையும், இரிடியம் 22·38 பங்கு எடையும் உடையதாகக் காணப்படுகிறது. ஆகவே மூன்றிலும் இரிடியம்தான் அதிக எடையுள்ள உலோகமாகும்.

5. சரியான விடை (அ)

தாய்மொழி என்று கொண்டு உலகில் அதிக மக்களால் பேசப்படும் மொழி சீனம்தான். சீன மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் 47½ கோடிப்பேர்களாகும். ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர்களின் எண்ணிக்கை 26½ கோடியாகும். உருது இந்தியுடன் சேர்ந்து 18 கோடிப் பேர்களுக்குத் தாய்மொழியாக விளங்குகின்றது.

6. சரியான விடை (ஆ)

கி. பி. 1497-ல் போர்ச்சுக்கலிலிருந்து புறப்பட்டுக் கடல் மார்க்கமாக, நன்னம்பிக்கைமுனையைச் சுற்றிக்கொண்டு வாஸ்கோடகாமா இந்தியாவின் மேற்குக்கரையை 1498-ல் அடைந்து கள்ளிக்கோட்டையில் இறங்கினார்.

7. சரியான விடை (இ)

திபெத்து—நேபாள எல்லையிலிருந்தாலும் எவரெஸ்ட் சிகரம் நேப்ாளத்தைச் சேர்ந்ததேயாகும்.

8. சரியான விடை (ஆ)

நியூசவுத்வேல்ஸ மாகாணத்திலிருக்கும் கான்பெர்ராதான் ஆஸ்திரேலியாவின் தலைநகரமாகும். சிட்னியும், மெல்பர்னும் ஆஸ்திரேலியாவின் முக்கியத் துறைமுகங்களாகும்.

9. சரியான விடை (அ)

முதன் முதல் தமிழில் நாவல் எழுதியவர் வேதநாயகம் பிள்ளையாகும். சென்ற நூற்றாண்டில் 1824-ம் ஆண்டு தோன்றி 1889-ம் ஆண்டு வரை வாழ்ந்தவர். திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வேளாங்களத்தூரில் பிறந்தார். கத்தோலிக் மதத்தைச் சேர்ந்தவர். மாயவரத்தில் முன்சிப் வேலை பார்த்துவந்தார். அவர் எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம் என்ற முதல் தமிழ் நாவல் 1887-ம் ஆண்டில் அச்சிடப்பட்டது.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M.A.,
at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-1.